Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-28 11-05-2005 புதன்கிழமை ஓசை-82


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் [illegible]தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-11750)


மட்டக்களப்பில் ஹர்த்தால்...


யாழ்.சுன்னாகத்தில் ஹர்த்தால்...



கிளிநொச்சியில் கண்டனப் பேரணி...

## இராணுவத்தினரின் சந்திவெளித் தாக்குதலைக் கண்டித்து

# கதவடைப்பு, கண்டனப் பேரணிகள் என வட. கிழக்கில் அரச எதிர்ப்புப் போராட்டங்கள்!

## இயல்புநிலை வெகுவாகப் பாதிப்பு

**மட்டக்களப்பு சந்திவெளியில் பொதுமக்கள் மீதும், மணவர்கள் மீதும், இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து வடக்குக் கிழக்கில் நேற்று பல இடங்களில் பல்வேறு அரச எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஹர்த்தால், கண்டனப் பேரணிகள் என்பன காரணமாக வடக்குக் கிழக்கில் இயல்புநிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.**

யாழ். குடாநாட்டில் ஹர்த்தால் காரணமாகப் பாடசாலைகள், பல்கலைக் கழகம், திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள், தொழில்நுட்பக்கல்லூரிகள் என்பன மூடப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டின் எந்தப் பகுதிகளுக்கும் போக்குவரத்துச்சேவைகள் இடம்பெறவில்லை. சில வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தினதும், ஆசிரியர் சங்கத்தினதும ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து பேரணி நடத்தினர். பேரணி முடிவில் கிளிநொச்சி போர்நிறுத்தக் கண் காணிப்புக் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.படுகொலையைக் கண்டித்து இன்று கிளிநொச்சியில் பேரணி

### தேசிய எழுச்சிப்பேரவை ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 09.05.2005 அன்று மட்டு. சந்திவெளியில் நடைபெற்ற படுகொலையைக் கண்டித்தும் அரசின் அட்டூழியங்களைக் கண்டித்தும் இன்று கிளிநொச்சியில் கண்டன ஊர்வலம் ஒன்றினை கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தக் கண்டன ஊர்வலமானது காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பித்து கிளிநொச்சி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயலகம், மாவட்ட அரச செயலகம் என்பவற்றை நோக்கிச் சென்று அங்கு கண்டன உரை நிகழ்த்தப்பட்டு, மகஜர்களும் கையளிக்கப்படவுள்ளன. எனவே இந்தக் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஒருமித்த கண்டனத்தைத் தெரிவிக்க அனைவரையும் அழைக்கின்றனர் தேசிய எழுச்சிப்பேரவையினர். (கு)

## சிங்கள மீனவர் வெட்டிக்கொலை

சிங்கள மீனவரான ஸ்டீபன்குரே (வயது-40) என்பவர் அவரது வலை வாடிவீட்டில் இனந்தெரியாத நபர்களினால் கோடாரியினால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கைகள், கண்கள்மற் றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் இவரது சடலத்தை நேற்றுக் காலை கல்குடாப் பொலிசார் கண்டெடுத்து வாழைச்சேனை வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். (32)

## யாழ். குடாநாட்டில் ஹர்த்தாலின் போது இராணுவம்-மக்களிடையே முறுகல்

### தடியடி, கண்ணீர்ப்புகைவீச்சு; கல்லெறி, காவலரண் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடெங்கிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலின்போது குழப்பத்தை விளைவிக்க முயன்ற படையினருக்கும், பொது மக்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவங்களும், வாக்குவாதங்களும் இடம்பெற்றதுடன் சில இராணுவக் காவலரண்களும் பொதுமக்களால் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் இராணுவக்காவலரண் நிறுவப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சூல்ஹெய்ம் இந்தியாவுக்கு விளக்குவார்

பொதுக்கட்டமைப்புக் குறித்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இந்திய அரசாங்கததிற்கு விளக்குவார் எனத் தெரிய வருகிறது. சிறிலங்காவுக்கு வருகைதரவுள்ள சிறப்புத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் பின்னர் இந்தியாவுக்கு சென்று இவ்விடயம் குறித்து விளக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

### திருமலை,சம்பூர், ஈச்சிலம்பற்று மீதான

## பொருளாதாரத் தடையைக் கண்டித்து இன்று மாபெரும் கண்டனப் பேரணி

திருகோணமலை சம்பூர், ஈச்சிலம்பற்றுப் பகுதிகள் மீது சிறிலங்கா இராணுவம் விதித்துள்ள பொருளாதாரத்தடையைக் கண்டித்து இன்று மாபெரும் கண்டனப்பேரணி நடைபெறவுள்ளது.

இன்று காலை மஹிந்தபுர சிறிலங்கா இராணுவ முகாம் முன்பாக இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.ஈச்சிலம்பற்று மக்கள் இந்தக் கண்டனப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். திருகோணமலையின் சம்பூர், ஈச்சிலம்பற்றுப் பகுதிகள் மீது சிறிலங்காப் படையினர் கடந்த மாத இறுதிப்பகுதி முதல் பொருளாதாரத்தடையை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதனை நீக்கக்கோரி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா மனித உரிமை ஆலோசகருடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

ஐ.நா மனித உரிமை சிறிலங்காவிற்கான ஆலோசகர் றோமுன்கோபன் நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது இச் சந்திப்பு ஒரு மணித்தியாலம் நடைபெற்றது.சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்களும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக அறிய முடிகின்றது.



# "நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

## கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்து ஓய்வு பெறும்

## திரு.கந்தையா-வைரமுத்து அவர்களை வாழ்த்துகிறோம்

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்,கிளிநொச்சி மாவட்ட உருத்திரபுரீச்சரம் ஆலயங்களின் பரிபாலன சபைச்செயலாளரும், முன்னாள் கரைச்சிக் கோட்ட கல்வி அலுவலராகவும், கரைச்சிவடக்கு அபிவிருத்தி நிறுவனம், கரவெட்டித்திடல் புளியம்பொக்கனை கிராம அபிவிருத்திச் சங்கம், புளியம்பொக்கனை பிரதேச சிரமாதான சபை ஆகியவற்றின் தலைவராக இருந்து ஆற்றிய பலதரப்பட்ட சேவைகளோடு கிளிநொச்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமைகள் புரிந்து சேவையினின்றும் ஓய்வு பெறும் திரு.க.வைரமுத்து அவர்களின் அளப்பெரிய சேவைகளைப் பாராட்டுகின்றோம்.

"நன்றி"

இவ்வண்ணம்,
புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய,
பரிபாலன சபையினரும்,தர்மகர்த்தா சபையினரும்.

(6113)

# வரி விளம்பரம்

### உயிரியல் கருத்தரங்கு

காலம்:-2005.05.12 வியாழக் கிழமை காலை (8.30) இடம்:-கேம் பிறிச்கல்லூரி (கிளிநொச்சி) ஆசிரியர்:- NESAN. (6112)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### விற்பனைக்குண்டு

இ.நிர்மலன் ஆசிரியன் விஞ்ஞானமும்,தொழில்நுட்பவியலும் தரம் 7 முதல் A/L வரை விரிவான பாடப் பரப்பு, பரீட்சைவழிகாட்டிகள், விஞ்ஞான விளக்கங்கள் மற்றும் இலவசப் பரீட்சை வினாத்தாள்கள். தரம் 1,2,3,4 அனைத்து பாடங்களும் அடங்கிய பரீட்சைவழிகாட்டிகள் வன்னியிலுள்ள அனைத்து அறிவமுது பொத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 0777413990. (6088)

### தவறவிடப்பட்டுள்ளது

மு.இராஜ்குமார் பொது சுகாதார பரிசோதகர் புதுக்குடியிருப்பு ஆகிய நான் எனது பயணப்பொதியினை 08.05.2005 ஒட்டுசுட்டானிற்கும் கற்சிலைமடுவிற்கும் இடையில் தவற விட்டுவிட்டேன். இதில் எனது உடுபுடவைகளும், ஆவணங்களும் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (6151)

### தவறிவிட்டது

முரசுமோட்டையைச் சேர்ந்த சிறி.சுரேந்திரா ஜெயரூபனது அடையாள அட்டை,பயணஅனுமதி அட்டை,வாகன அனுமதிஅட்டை, வயறிங் அடையாள அட்டை என்பன முள்ளியவளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர் இயற்கை விற்பனை நிலையம் அல்லது ஈழநாதம்பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். சன்மானம் வழங்கப்படும். (6118)

### விற்பனைக்குண்டு

கனகபுரம் 7ஆம் பண்ணையில் $2^1/_2$ ஏக்கர் உறுதிக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு. முத்தம்பன் பல்பொருள் வாணிபம் கனகபுரம்றோட்,கிளிநொச்சி. (6117)

# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:—** கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர். *Commputer Programmer*

**தகைமைகள்:—** BIT கற்கைநெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினிக் கல்வியில் பொது/சிறப்புப் பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

அல்லது

கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும்,இரண்டு (02) வருட பட்டறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:—** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக் கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு,கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியகத்திற்கு,23.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்
05. மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11954)

## இரணைமடு சிறுபோகம்,நீர் விநியோகம் (இடது கரை)

இரணைமடுத் திட்டம் இடதுகரை மூன்றாம் வாய்க்கால் உட்பட சகல கிளை வாய்க்கால்களிலும் சிறுபோகக் கூட்டத் தீர்மானத்திற்கமைவாகவும் நியாய் 11திட்ட கட்டுமானப் பணிகள் வேலைக்காகவும் 15.07. 2005 இற்குப்பின் நீர் வழங்கப் படமாட்டாது. முக்கியமாக இடதுகரையில் இது கட்டாயமாக அமுல் நடத்தப்படும் என்பதை சகல விவசாயிகளும் கவனத்தில் எடுக்கவும்.

ந. கந்தசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரிவு..

(சி-11953)

# பணிநிலை வேண்டுகை

## கணினி இயக்குனர்:-01

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமும்இருந்து வேண்டுகைகள் கோரப்படு கின்றன.சுயவிபரம் அடங்கிய சொந்தக் கையெழுத் திலான தங்கள் வேண்டுகைகளை பதிவுத்தபால் மூலம் 16.05.2005 ஆம் திகதிக்கு முன்னதாக விளம்பர இல.3528 "ஈழநாதம்" புதுக்குடியிருப்பு என்னும் முவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி.11876)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1941
*
12
*
31




மறைவு
2004
*
04
*
23

## அமரர்.இராமசாமி விமலமூர்த்தி

கண்முன் உங்கள் முகம்
நினைவிலும் உம் நாமம்
மரணம் உம்மை அழைத்துப் போன போது
தேற்ற வழி இன்றி
தோற்று நின்றோம் விதி முன்
மறுபடியும் பிறந்திடுங்கள்
வாழ எம்முடன் அப்பா
உறவினர் யாவரும் விரும்புகின்றோம்.

உங்கள்ஆத்ம சாந்த பெற
வேண்டி நிற்கும்
குடும்பத்தினர்.

(6119)





அமெரிக்க தாக்குதலில் தீப்பற்றி எரியும் மாடிக் கட்டம் ஒன்றையும், தாக்குதல் அச்சத்தில் பாதுகாப்பாக சிறுவனை அப்புறப்படுத்தும் ஒருவரையும் படங்களில் காணலம.

# ஈராக்தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் தீவிர தாக்குதல்

(பாக்தாத்)

**ஈராக்கில் சிரியாவின் எல்லைப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த தீவிரவாதிகளை அமெரிக்க இராணுவத்தினர் விமானப் படை விமானங்கள், உலங்குவானூர்திகள், இயந்திரத்துப்பாக்கி ஆகியவற்றின் உதவியுடன் பின்வாங்கச் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

சுமார் ஆறு மாதகாலமாக அங்கிருந்த தீவிரவாதிகள் அமெரிக்கப் படையினருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும், கடந்த சனிஇரவு ஆரம்பிக்கப்பட்ட" மட்டடர்" இராணுவ நடவடிக்கை மூலம் அவர்களை துரத்திவிட்டதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் குறைந்தது மூன்று அமெரிக்கப்படைகள் பலியானதாகவும் திங்களன்றும் ஒருவர் பலியானதாக லோஸ் ஏஞ்சல்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டபோதும் அதனை இராணுவத்தினர் உறுதிப்படுத்தவில்லை. அத்துடன் அப்பகுதியில் வாழ்ந்த பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. "கயிம்" நகரில் நடைபெற்ற சண்டையில் 20 இராணுவத்தினர் காயமடைந்தனர் என அமெரிக்கக் கடற்படையதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கூறுகிறது.

அத்துடன் தீவிரவாதிகளின் குண்டுத்தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சேதமடைந்ததாகவும், மேலும் ஒரு தற்கொலைத் தாக்குதலில் கடற்படை டாங்கி ஒன்று அழிக்கப்பட்டதாகவும், இதில் எவரும் கொல்லப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இதே வேளை பத்துத் தீவிரவாதிகள் சரணடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



பாக்தாத்தின் மையப்பகுதியில் கார்க்குண்டு ஒன்று நேற்று வெடித்தது. இச்சம்பவத்தில் எட்டுப்பேர் கொல்லப் பட்டதுடன், 16 பேர் காயமடைந்து முள் ளனர். இதன் போது சம்பவ இடத்தை வந்தடையும் அமெரிக்கப்படையினர்.

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

இந்தோனேஷியாவில் உள்ள பண்டா ஆசே மாகாணப் பகுதியில் திங்கட்கிழமை காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிச்டர் கருவியில் 5.5 எனப் பதிவாகி இருந்ததாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக் கத்தையடுத்து மக்கள் பீதியடைந்து தங்கள் வீடு, அலுவலகங்களில் இருந்து வெளியேறி வீதிகளுக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# நாஜி படைகள் தோற்கடிக்கப்பட்ட 60 ஆம் ஆண்டு மொஸ்கோவில் கோலாகலக் கொண்டாட்டம்

(மொஸ்கோ)

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் நாஜிப் படைகளைத் தோற்கடித்து அன்றைய சோவியத் யூனியனும், நேச நாடுகளும் பெற்ற வெற்றியின் 60 ஆவது ஆண்டு விழா ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது.

இதைச் சிறப்பிக்கும் வகையில் ரஷ்ய இராணுவ வீரர்களின் பிரமாண்டமான அணிவகுப்பு கிரெம்ளின் அருகே புகழ்பெற்ற செஞ்சதுக்கத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரெஞ்ச் அதிபர் ஜக்ஸ் சிராக், ஜேர்மன் பிரதமர் ஜெரார்ட் ஷுரோடர், சீன அதிபர் ஹுஜிந்தாவ் ஆகியோர் உள்ளிட்ட பல உலக நாடுகளின் தலைவர்கள் அந்த அணிவகுப்பைப் பார்வையிட்டனர்.

இவ் விழாவையொட்டி மொஸ்கோ நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. மொஸ்கோ மீது அனாமதேய விமானங்கள் பறந்தால் சுட்டு வீழ்த்துவதற்குத் தயாராக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் நிறுத்தப் பட்டிருந்தன.

மொஸ்கோ நகரின் பாதாள ரயில் நிலையங்களுக்கு வந்து செல்லும் வழிகள் அனைத்தும் மூடி சீல் வைக்கப்பட்டு இருந்தன. எனினும் நகரின் மத்தியில் உள்ள பிரதான சாலையில் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவத்தின் மொஸ்கோ பாண்ட் வாத்தியக் குழு இராணுவப் பாடலை இசைக்க வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி இவானோவ் ஏற்றுக்கொண்டார்.

இரண்டாவது உலகப் போரில் நாஜிகளை எதிர்த்துத் தீரத்துடன் போரிட்ட வயது முதிர்ந்த 2600 வீரர்கள் மற்றும், வீராங்கனைகளும் அணிவகுப்பில் பங்கேற்றனா். அவர்களில் பலர் நடக்க இயலாத அளவுக்கு வயது முதிர்ந்தவர்கள். எனவே இராணுவவண்டிகளில் அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் ரஷ்யா மட்டுமே இரண்டு கோடியே 70 லட்சம் மக்களைப் பலிகொடுத்துள்ளது. நாஜிப் படைகளை எதிர்த்துப் போரிட்ட இங்கிலாந்து இராணுவம் உள்ளிட்ட பல இராணுவங்களில் பணியாற்றிய 36,000 இந்திய வீரர்களும் அப் போரில் பலியாகினர்.

ரஷ்ய இராணுவத்தின் அணிவகுப்பு நடைபெற்ற செஞ்சதுக்கத்தில் நடந்த விழாவில் அதிபர் புட்டின் சிறப்புரையாற்றுகையில்,

"நாஜிகளைத் தோற்கடித்ததில் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் வழங்கிய ஆதரவை ரஷ்யா ஒருபோதும் மறக்காது. நேச நாடுகளின் வெற்றியிலிருந்து எங்களது வெற்றியை நாங்கள் பிரித்துப் பார்த்ததில்லை.

"போரில் வென்று 60 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் ஒவ்வோர் ஆண்டும் மே ஒன்பதாம் திகதி போரின் விளைவுகளை நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது ரஷ்யா. அது நம் மனச்சாட்சியை தட்டி எழுப்பி, நமது பொறுப்புக்களை நினைவூட்டும் நிகழ்ச்சியாகும்'' என்றார் ரஷ்ய அதிபர் புட்டின்





ரஷ்ய இராணுவ வீரர்கள் அணிவகுப்பு மரியாதையில் ஈடுபட்டுள்ளதையும், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராகும் உலகத் தலைவர்களையும் படங்களில் காணலாம்.

## இந்திய விஞ்ஞானிகளுக்கு ஜப்பான் விசா வழங்க மறுப்பு

(டோக்கியோ)

இந்திய விஞ்ஞானிகள் 11 பேருக்கு ஜப்பான் அரசு விசா வழங்க மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 1998 இல் பொக்ரானில் இந்தியா அணு குண்டு சோதனை நடத்தியது. அன்று முதல் இந்திய அணு விஞ்ஞானிகளுக்கு விசா வழங்க ஜப்பான் மறுத்து வருகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டு நான்கு பேருக்கும், கடந்த ஆண்டு ஆறு பேருக்கும் இந்த ஆண்டு ஒரு வருக்கும் விசா மறுக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாமல் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்திய விஞ்ஞானிகளுக்கு ஜப்பான் விசா வழங்க மறுப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு இந்திய விஞ்ஞானிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க சனாதிபதி ஒருவர் முதல்முறையாக ஜோர்ஜியா பயணம்

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஜோர்ஜியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

முன்னாள் சோவியத் நாடான ஜோர்ஜியாவிற்கு விஜயம் செய்த முதலாவது அமெரிக்க சனாதிபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோர்ஜியா சென்றடைந்த அமெரிக்க சனாதிபதி புஷ்சை ஜோர்ஜியா சனாதிபதி வரவேற்றார். புஷ்சின் வருகையையொட்டி ஜோர்ஜியா மக்கள் பெருந்திரளானோர் வீதிகளில் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜியா நகரமெங்கும் ஜோர்ஜியா மற்றும் அமெரிக்கக்கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.ஐந்து மில்லியன் மக்களைக் கொண்ட ஜோர்ஜியா 1991 ஆம் ஆண்டு தனிநாடாகச் சுதந்திரமடைந்த. பின்னர் தற்போது பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஜோர்ஜிய பாராளுமன்றக் கட்டடத்தில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சும் (இடது),ஜோர்ஜிய சனாதிபதி சகாஸ்விலி (வலது) யும் இணைந்து செய்தியாளர் மாநாட்டில் கேள்விகளிற்கு விடையளிக்கின்றனர்.

## ஈராக்கின் இர்பில் பகுதியில் ஒரே குழியில் ஆயிரம் எலும்புக்கூடு

ஈராக்கின் இர்பில் பகுதியில் ஒரே குழியில் 1000 பேர் புதைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் குர்திஷ் இனத்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. சதாம் உசேன் ஆட்சி நடந்தபோது குர்திஷ் இனத்தவர்கள் மொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டு வந்தனா். அவரது ஆட்சியில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட குர்திஷ் இனத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தென்கொரியாவைச் சேர்ந்த இந்தக் குட்டி புத்த துறவிகள் சியோலிலுள்ள புத்த துறவிகளின் வாழ்க்கை முறை குறித்துத் தெரிந்து கொள்ள வந்துள்ளனர். மடத்துக்கு வந்தவர்கள் எதிரே உள்ள கடல் விலங்குகளின் கண்காட்சியை சுற்றிப் பார்க்க சாலையைக் கடக்கின்றனர்.

# மாணவர்களின் மாலைநேரக்கற்றலுக்காக சூரிய மின்கலத் தொகுதிகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

**வடமராட்சி கிழக்கு கல்விக்கோட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாலை நேரக்கற்றலுக்கான சூரிய மின்கலத்தொகுதிகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் மருதங்கேணி அ.த.க. பாடசாலையில் வித்தியாலய அதிபர் நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.**

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் பொருண்மிய மதியுரையக அமெரிக்க கிளையினரால் சூரிய மின்கலத் தொகுதிகள் எட்டுப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சீ. நளன், பொருண்மிய மதியுரையகப் பணிபபாளர் தாஸ், வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவன், கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் அண்ணாத்துரை, வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் மூவேந்தன் மற்றும் பாடசாலை மாணவர்கள்,அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நலன் விரும் பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் மாணவர் அமைப்புப்பொறுப்பாளர், பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர், வடமராட்சிகிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். (தீ)

# மன்னார் தோட்டவெளிப் பகுதியில் பண்டைக்கால பொருட்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் தோட்டவெளிப்பகுதியில் மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட வேளை பண்டைக்கால பொருட்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேச மக்களால் வீட்டுத் தேவைக்காக மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போது நாணயங்கள், சமையல் பாத்திரங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை சங்கிலியன் காலத்தில் பயன்படுத்தப் பட்டவையாக இருக்கலாமென நம்பப்படுகின்றது. (18)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை பூநகரியில் அதிகரிப்பு

(பூநகரி)

பூநகரியின் பல பிரதேசங்களிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. குறிப்பாக கறுக்காய்த்தீவு, பள்ளிக்குடா, செல்லை யாபுரம் , வேரவில், வலைப்பாடு, ஜெயபுரம், நாச்சிக்குடா, முழங்காவில் ஆகிய இடங்களில் அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. இது விடய மாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

# "ஹெரோயின்" போதைப் பொருள் அறபா நகர்ப்பகுதியில் மீட்பு

## சந்தேகநபர் தலைமறைவு

(செட்டிகுளம்)

வவுனியா அறபா நகர்ப்பகுதியில் போதை பொருட்களை பதுக்கிவைத்திருந்த இடம் ஒன்றில் இருந்து 30 சிறிய ஹெரோயின் போதைபொருட் பைகளை வவுனியா பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இதனுடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகி விட்டதாக வவுனியா பொலிஸ் நிலைய மது போதை தடுப்புப் பிரிவின் சப் இன்பெக்டர் சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா தேக்கங்காட்டு பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்ததாக வவுனியா மது வரித் திணைக்களத்தினால் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக போதைப் பொருள் பாவனை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றினை கட்டுப்படுத்த வவுனியா பொலிசாரும், மதுவரி திணைக்களமும் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த நிலையங்களின் பொறுப்பதி காரிகள் தெரிவிக்கின்றார்கள். (21)

# தென்துருவ தமிழ் சம்மேளன ஏற்பாட்டில் சிட்னியில் மாமனிதர் சிவராமிற்கு அஞ்சலி

அவுஸ்திரேலிய தென்துருவ தமிழ் சம்மேளன ஏற்பாட்டில் ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமிற்கு நினைவு அஞ்சலிக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிட்னி நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓபன் தமிழ் ஆலய ஆசிரியை திருமதி. ராணி கணேஸ் பொதுச்சுடரை ஏற்றிவைக்க, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மாமனிதர் சிவராமின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து மக்கள் அஞ்சலி நடைபெற்றது. அடுத்த நிகழ்வாக தென்துருவ தமிழ் சம்மேளனத்தைச் சேர்ந்த அனா பரராஜசிங்கம் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. வரவேற்புரையைத் தொடர்ந்து வண. பிதா ஜெகசோதி அடிகளார் ஜெபம் செய்து மாமனிதர் சிவராமின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்தனை செய்தார். தொடர்ந்து சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர் சஞ்சயன் ஊடகவியலாளர் சிவராமிற்கு மாமனிதர் விருது அளித்து தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையினை வாசித்தார். இதனையடுத்து சிட்னியிலுள்ள தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களும் அங்கு உரையாற்றினர். தொடர்ந்து தமிழீழத்திலிருந்து வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், செ.கஜேந்திரன் ஆகியோர் மாமனிதர் சிவராமின் தீர்க்கதரிசமான அரசியல் பார்வையையும், சமகால அரசியல் நிலவரங்களையும் எடுத்துக் கூறினர். இந்த அஞ்சலிக் கூட்டத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமிற்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

# உலக செஞ்சிலுவை தினத்தை சிறப்பிக்க புதுக்குடியிருப்பில் ஒன்றுகூடல் நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

உலக செஞ்சிலுவை தின ஒன்றுகூடல் கடந்த ஞாயிறன்று பிற்பகல் 3 மணியளவில் இலங்கை செஞ்



சிலுவைச் சங்கம் முல்லைத்தீவு (புதுக்குடியிருப்பு) ஒன்றுகூடல் மண்டபத்தில் உப. தலைவர் அ.கா. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பத்துப் பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டதுடன், கிளையிலிருந்து ஊர்வலமாக மு/ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாசாலைக்குச் சென்று அங்கு சிரமதான நிகழ்வும் மர. நடுகையும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொருளாளர் த.ஸ்ரீபாலேஸ்வரன் செஞ்சிலுவை செயற்பாடுகளையும், கோட்பாடுகளையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்து வருகின்ற சேவைகளைப் பற்றியும் தெரிவித்தார். தொடர்ந்து செயற்குழு உறுப்பினர்களாகிய கனகசுந்தர சுவாமி, தியாகராசா ஆகியோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், அதிபர்களின் சார்பில் மு/முல்லைத் தீவு மகாவித்தியாலய அதிபர் அல்பிறட் மற்றும் மு/ஸ்ரீசுப் பிரமணிய வித்தியாசாலை அதிபரும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் செயற்குழு உறுப்பினர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள் , அங்கத்தவர்கள் எனப்பலர் பங்குபற்றினர். நன்றியுரையினை ஊழியர் சு.ஸ்ரீரங்கன் தெரிவித்ததுடன், மாலை 5.30 மணியளவில் இந் நிகழ்வு நிறைவு பெற்றது. (08)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவ ஒழுங்குகள் ஆராய்வு

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய கேட்போர் கூடத்தில் பரிபாலன சபைத்தலைவர் மு.குகதாசன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்னம், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முள்ளியவளை அரசியல்துறைப் பொறுப்பாளர், காவல்துறை மேற்பார்வையாளர் றஞ்சித்குமார், வீதி ஒழுங்கமைப்பு கண்காணிப்புப் பொறுபாளர் சிவகுமார் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதில் பொங்கல் தினமான எதிர் வரும் 23ஆம் திகதி வடபகுதிக்கு வெளியே இருந்து முகமாலை ஊடாக வரும் வாகனங்கள் பரந்தன் புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத் தீவு வழியாக வற்றாப்பளையையும், ஓமந்தை ஊடாக வரும் வாகனங்கள் நெடுங்கேணி முள்ளியவளை வீதி வற்றாப்பளை மூன்றாம் கட்டைச் சந்திஊடாக கோவிலை வந்தடையும் எனவும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேபோன்று பொங்கல் தினத்தன்றும் அதற்கு அடுத்த நாளும் 24 மணித்தியாலயமும் பாதை திறந்து வைக்கப்படவேண்டும் என்று முல்லை. மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் வழங்கினார்கள்.

அதேபோன்று இந்த ஆலய சுற்றுவட்டாரத்தின் துப்புரவுப் பணியினை கரைதுறைப்பற்று பிரதேச சபையினரும், வற்றாப்பளை மகாவித்தியாலய சாரணிய மாணவர்களும் மேற்கொள்கின்றனர். அத்துடன் பொங்கல் நடைபெறமாட்டாது என்ற வதந்தி பொய் எனவும் வழமை போல பொங்கல் சிறப்பாக நடைபெறும் எனவும் பரிபாலனசபைத் தலைவர் தெரிவித்தார். (20)

# வவுனியாவில் நியாப்-II வேலைத்திட்டம் விரைவாக முன்னெடுக்க நடவடிக்கை

(செட்டிகுளம்)

நியாப் - II திட்டம் விரைவாக ஆரம்பிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதன் ஒரு கட்டம் குறித்து அண்மையில் வவுனியா வடக்கு சேமமடுப் பகுதியில் ஆராயப்பட்டுள்ளது. வவுனியா பிரதேச செயலாளர் செல்வி. சுகந்தி துரைசாமி தலைமையில் அப்பகுதிக்கு சென்ற குழுவினர் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்

நியாப்- II திட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் வவுனியாவின் வடக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட இப்பதாக வவுனியாப் பிரதேச செயலாளர் செல்வி. சுகந்தி துரைசாமி தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் பத்து கிராமங்கள் 100 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# அத்துமீறி குடியேறியவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரம்!

## -மன்னாரில் வழங்க ஏற்பாடு

(மன்னார்)

கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் அத்துமீறி குடியேறி இருந்து இதுவரை காலமும் அந்தக் காணிகளுக்கு உறுதி வழங்கப்படாத காணிகளுக்கான விசாரணைகள் நேற்று முன்தினம் மன்னார் நகரப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

இதற்கு வடக்கு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் கே. பரமலிங்கம், உதவி ஆணையாளர் தங்கன் மற்றும் மன்னார் காணி அபிவிருத்தி சங்க அதிகாரிகள் காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதற்காக மன்னார் பள்ளிமுனை மேற்கு,பள்ளிமுனை கிழக்கு, சந்திபுரம், எமில்நகர் போன்ற இடங்களில் அத்துமீறி வாழும் மக்களை அழைத்து ஆரம்ப விசாரணைகள் நடாத்தி இவர்களுக்கான காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரம் வழங்கும் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (18)

## தெல்லிப்பழை ப.நோ. கூ.சங்க வாடிக்கையாளர் இராணுவத்தினரின் கெடுபிடியால் அவதி

(நல்லூர்)

**தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் தமது கடமைகளை நிறைவு செய்வதில் இராணுவத்தினரின் கெடுபிடிகளால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.**

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தலைமைச்செயலகம் கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் உட்செல்வதில் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாகின்ற நிலைமை தொடர்ந்து காணப்படுகின்றது.

பொது மக்களுக்கு சேவையாற்றும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் உயர்பாதுகாப்பு வலய எல்லைக்குள் இயங்க அனுமதி வழங்கிய இராணுவத்தினர் பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யச் செல்லவிடாது தடுத்து நிற்பது எந்த வகையில் நீதியென பொது மக்கள் கேட்கின்றார்கள். (41)

## பேருந்து தரிப்பிடம் விசமிகளால் சேதம்

(புன்னாலைக்கட்டுவன்)

நள்ளிரவு நேரம் பேருந்து தரிப்பிடம் இனம் தெரியாதவர்களினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக் கட்டுவன் சந்தி இராணுவ முகாமிற்கும் ஊரெழு இராணுவ முகாமிற்குமிடைப்பட்ட சுமார் 300 மீற்றர் தொடக்கத்தில் உள்ள பேருந்து தரிப்பிடமே சேதமாக்கப்பட்டதாகும்.

இத் தரிப்பிடம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டு மீண்டும் அண்மையில் புனரமைக்கப்பட்டது.

இதனை சீருடையினரே தமது பாதுகாப்புக்காக உடைத்ததாகவும், இரு புறமும், முகாம் இருப்பதனால் இரவு வேளையில் வேறு நபர்கள் இச் செயலில் ஈடுபட முடியாது ஈடுபட்டாலும் சீருடையினரின் உதவி இருக்க வேண்டுமெனவும் பொது மக்கள் கூறுகின்றனர். (41)

*-நியாப் உதவித்திட்டத்தின்கீழ்-*

## தென்மராட்சியில் 5 கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடிவு

( தென்மராட்சி)

நியாப் நிதி உதவித் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து கிராமங்களை அபிவிருத்தி செய்ய முன்வந்திருப்பதாக தென்மராட்சி பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. மண்டுவில், கரம்பக்குறிச்சி, வெள்ளம்போக்கட்டி கைதடி கிழக்கு, குடமியன் போன்ற கிராமங்களை இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், இக்கிராமங்களுக்கு வீடு, வீதி, முன்பள்ளிகள், கிணறு போன்றவற்றை அமைத்துக்கொடுக்கவும் இந்த நிறுவனம் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை சுனாமியால் பாதிக்கப்பட்டு இப்பிரதேசத்தில் தங்கியுள்ள மருதங்கேணி, பருத்தித்துறை, மண்முனை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த 123 குடும்பங்களுக்கு சுனாமி நிவாரண கொடுப்பனவாக ரூபா ஐயாயிரம் வழங்கப்பட்டுவருவதாகவும் சுனாமி நிவாரண முத்திரை இப்பிரதேசத்தில் 153 குடும்பங்களைச் சேர்ந்த 615 பேருக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (28)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன

யாழ். மாதகல் பிரதேசத்தில் சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்பகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களிற்கூடாக வலிகாமம் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் தலைமையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக 22 குடும்பங்களிற்கும் சென்தோமஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக 149 குடும்பத்தினருக்கு நிவாரணமாக அரிசி, மா, சீனி, பருப்பு, கடலை, தேயிலை பால்மா போன்ற உணவுப் பொருட்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து மீதியான நிவாரணக் கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் நடைபெற்றது. லூர்த்துமேரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினைச் சேர்ந்த 65 குடும்பங்களுக்கும், இராயராஜேஸ்வரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 61 குடும்பங்களுக்கும், சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கும் உதயதாரகை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 31 குடும்பங்களுக்கும், மாரீசன் கூடல் குருமண் துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 66 குடும்பங்களுக்கும் போயிட்டி சென் அன்ரனீஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 32 குடும்பங்களுமாக மொத்தம் 304 குடும்பங்களுக்கு மேல் குறித்த நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது. இது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித நிவாரண சேவைத் திட்டச் செயற்பாடு என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாபெரும் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக மாபெரும் கல்விக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி பாடசாலை வளாகத்தில் இம்மாதம் 12, 13, 14 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதன் போதும் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் மற்றும் யாழ்ப்பாண மின்னகத்தின் எல்.ஜி அபான்ஸ் காட்சிக்கூடம், அன்னை நாகாபூட் சிற்றியின் நில்கமல் பிளாஸ்ரிக் தளபாட காட்சிக்கூடம், குறிஞ்சிஸ் தானத்தின் பஜாஜ் மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம், I.I.S கணினி நிறுவனத்தின் காட்சிக் கூடம், யாழ்.சி.டி (CD) சிற்றி இன் காட்சிக் கூடம் உட்பட பல காட்சிக் கூடங்களும் இடம்பெறவுள்ளதுடன் சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருட்களையும் கொள்வனவு செய்யலாம். அத்தோடு சிறுவர்களுக்கு பெருவிருந்தாக மெரிகோரவுண்ட் பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி, மயாஜாலக் காட்சிகள், சிறுவர்களுக்கான உல்லாச ரயில் சவாரி என்பனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (36)

*-சுனாமியால் பாதிக்கப்பட்ட-*

## பல்கலை மாணவர் 50 பேருக்கு கனேடிய பல்கலை நிறுவனம் உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக உயர் கல்வி கற்கும் மாணவர்கள் 50 பேருக்கு உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனம் (WUSC) தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வாகிக்கப்பட்டு வரும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி (REEDO) நிறுவனத்தினூடாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அனுசரணையுடன் தலா இரண்டாயிரம் ரூபா பணமும், கோவை வைக்கின்ற பை,குடை என்பவற்றை வழங்கியது.

## மாணவர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனத்திலிருந்து 2002, 2003 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறிய பின்வரும் மாணவர்கள் எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு முன்பாக யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தங்களது பெறுபேற்று சான்றிதழ்கள், அடையாள அட்டை சகிதம் தவறாது தொடர்பு கொள்ளுமாறு உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத் தலைவர் வி.தயாகரன் கேட்டுள்ளார்.

சாந்தினி வேலுப்பிள்ளை (NDE-2002), கந்தையா ஞானச்சந்திரன் (HNDA-2003), கனகசபை கோடீஸ்வரன் (HNDA-2003), இராமச்சந்திரா தயாபரன் (HNDA-2003), சிவகெங்கா சிவானந்தன் (HNDA-2003), சோமசுந்தரம் யசோதரன் (HNDA-2003), சோதிநாதன் முகுந்தன் (HNDA-2003), சசிகலா சின்னத்தம்பி (HNDA-2003), பத்மநாதன் லுரேந்திரன் (HNDA-2003), சிவயோகினி சின்னத்தம்பி (HNDA-2003), சோமசுந்தரன் சுகிர்தன் (HNDA-2003), ஞானசேகரம் ரூபகரன் (HNDA-2003),

## சுனாமியால் அடித்துச் செல்லப்பட்ட தாலிக்கொடி 4 மாதங்களின் பின் மீன்பிடி வலையில் சிக்கி மீட்பு

சுனாமிப் பேரலையினால் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட தாலிக்கொடி ஒன்று நான்கு மாதங்களின் பின் உரியவர்களிடம் சேர்ந்த சம்பவம் ஒன்று வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றில் நடைபெற்றது.

கடந்த டிசம்பர் மாதம் ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது செம்பியன் பற்றில் வசிக்கும் மொறிஸ்குமார் அவரது மனைவி றொயிஸலாவினது வீடு உடமைகளும் கடலினால் இழுத்துச் செல்லப்பட்டன. அதனோடு றொயிஸலாவினது 13 பவுண் தாலிக்கொடியும் சில முக்கிய ஆவணங்களும், பைக்குள் இருந்தபடி அடித்துச் செல்லப்பட்டது. சில தினங்களுக்கு முன் மீனவர்களின் வலைகளில் பை சிக்கிக் கொண்டது. அப்போது அதற்குள் தாலிக்கொடி அப்படியே இருந்தது. நனைந்து சேற்றுடன் காணப்பட்ட ஆவணங்களை வைத்து அடையாளம் காணப்பட்ட அந்தத் தாலிக் கொடி மொறிஸ் குடும்பத்தினரிடம் மீனவர்களினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (32)

## அடிப்படை வசதியை ஏற்படுத்தித் தருமாறு நாவாந்துறை- சூரியவெளி மக்கள் கோரிக்கை

நாவாந்துறை சூரிய வெளிக் கிராமத்திற்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரக்கோரி சூரிய வெளி மக்களும், நாவாந்துறை சென் மேரீஸ் சனசமூக நிலையம் யாழ். பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

வீதி ஒழுங்கின்மை வடிகால் சீரின்மை, குடிநீர் வசதிகள் போதாமை, மலசலகூட வசதியின்மை,இப்பிரதேச விளையாட்டு மைதானம் சீரின்மை, பாடசாலை கட்டட வசதியின்மை, தளபாடப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் இவற்றை நிவர்த்திக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இப் பிரதேசத்தின் வளர்ச்சியை முன்னேற்றவும் தங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. (28)

## மட்டு-சந்திவெளி சம்பவம் குறித்து தென்மராட்சி கல்விச் சமூகம் கண்டனம்

(தென்மராட்சி)

கடந்த மூன்று வருடங்களாக நிலவிவருகின்ற சமாதான நிலைக்கு மட்டக்களப்பு- சந்திவெளியில் நடைபெற்ற பொதுமக்கள் மீதான காட்டு மிராண்டித்தனமான நியாயமற்ற இராணுவத் தாக்குதல் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு சந்திவெளி சம்பவம் குறித்து தென்மராட்சி கல்விச் சமூகத்தினர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தபோது பாடசாலை மாணவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருப்பது சமாதானம் குறித்த அரசினுடைய கபட நாடகத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்நிலைமையை தென்மராட்சி கல்விச் சமூகத்தினராகிய நாம் மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வாறான செயல்கள் இனிமேலும் நடை பெறாதிருக்க அரசு உறுதி கூற வேண்டும் என உரத்த குரலில் வேண்டுகின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலவச கணினிப்பயிற்சி

எதிர்வரும் 15ஆம் திகதி தாமோதரம்பிள்ளை வீதி சங்கத்தானையில் இலவசக் கணினிப் பயிற்சி நிலையம் திறக்கப்பட்டவுள்ளது.

எனவே ஆங்கில, கணினி வகுப்புக்களுக்கு பதிவு செய்த மாணவர்கள் வரும் வியாழக் கிழமை நிலையத்திற்கு வருகை தந்து தங்களின் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# சந்திரிகா முன்னுள்ள தெரிவு

# ஆட்சியா? கட்சியா?

*"சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இக்கட்டானதொரு அரசியற் சூழ்நிலையில் சிக்கியுள்ளார். தனது கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தை இழக்க வேண்டும். அல்லது அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் கட்சியை இழந்து விட வேண்டும்."*

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்
ரவூப் ஹக்கீம்

□ □ □

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா எதிர்கொண்டுள்ள நெருக்கடியை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சரியாகவே பிரதிபலித்திருக்கின்றார் என்றே கூறலாம். அதாவது கட்சியா? அரசாங்கமா? என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலையில் சனாதிபதி சந்திரிகா உள்ளார் எனின் மிகையாகாது.

இன்றைய கூட்டணி அரசாங்கத்தில் முக்கிய பங்காளியான ஜே.வி.பி யின் அரசியல் அணுகுமுறையானது அரசாங்கத்தை சனாதிபதி சந்திரிகா தனது கட்டுப்பாட்டிலோ அன்றி சர்வதேச நாடுகளின் ஆலோசனைக்கோ ஏற்ற வகையில் நடத்திச் செல்லக்கூடிய வகையில் இடம் தருவதாக இல்லை. ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சியையாயினும் சரி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை ஆயினும் சரி தன்னுடைய இஷ்டம், விருப்பத்திற்கேற்பவே நடத்திச் செல்ல விரும்புகின்றது.

இனப்பிரச்சினை மற்றும் தமிழ் மக்கள் சார்ந்த எந்தப் பிரச்சினையாயினும் சரி ஜே.வி.பி யின் நிலைப்பாடானது தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை மூலமோ அன்றி இணக்கப்பாடான நடவடிக்கை மூலமோ தீர்வொன்றை எட்டுவதற்குச் சாதகமானதாக இல்லை.



**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதில் காட்டும் அக்கறையைவிட அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டுபவராக இருப்பாரேயானால் அவர் நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லத் தயாராகி விட்டார் என்றே அர்த்தம் கொள்ளலாம்.**

இந்நிலையானது இன்றைய இலங்கையின் அரசியல்- இராணுவ யதார்த்தங்களுக்கும் மாறானது மட்டுமல்ல சர்வதேச நாடுகளின் அபிப்பிராயத்திற்கு மாறானதாகும். சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தைத் தவிர்த்து தமிழர் தரப்பிற்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இணக்கப்பாடானதொரு தீர்வை எட்ட வேண்டும் என்றே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன.

ஆனால் ஜே.வி.பி இதற்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதோடு மட்டுமல்ல அரசாங்கம் இவை தொடர்பாக ஆதரவான தீர்மானம் எதையும் மேற்கொண்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாகவும், எச்சரித்து வருகின்றது. ஆனால் ஜே.வி.பி தனியாக தமிழர் தொடர்பான விடயத்தில் மட்டும் தான் இவ்வாறு நடந்து கொள்கின்றதென்பதில்லை . ஜே.வி.பி அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான பல்வேறு விடயங்களையும் தீர்மானிக்க முற்பட்டுள்ளதென்பதே இன்றைய யதார்த்தமாகவுள்ளது. எடுத்துக்காட்டாக மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற விடயங்களில் ஜே.வி.பி நடந்து கொள்ளும் விதத்தைச் சுட்டிக் காட்ட முடியும்.

மின்சார சபை மீளமைப்புத் தொடர்பாக ஏற்கனவே தனது எதிர்ப்பை வெளிப்படுத்திவந்த ஜே.வி.பி.யினர் இறுதியில், மறுசீரமைப்புத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஜே.வி.பி அமைச்சர்கள் நால்வரும் அமைச்சரவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இவ் வெளிநடப்புத் தொடர்பாக ஊடகங்களுக்குப் பேட்டி அளித்த ஜே.வி.பி யின் அமைச்சர்கள் மறுசீரமைப்புத் திட்டத்தை பரிசீலனை செய்ய கால அவகாசம் போதாமை காரணமாகவே தாம் வெளி நடப்புச் செய்ததாகத் தெரிவித்தனர். ஆனால் உண்மை அவ்வாறு இல்லை. இம் மறுசீரமைப்பை ஏற்க ஜே.வி.பி தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தயாரிக்கப்பட்ட இம்மறுசீரமைப்புத் திட்டத்தை ஜே.வி.பி அமைச்சர்களின்றியே அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் ஜே.வி.பி யின் தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்த அச்சுறுத்தலுக்குப் பணிந்து அத்திட்டத்தைக் கைவிட்டது.

இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தாலோ அன்றி பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இணக்கப்பாடு ஒன்றிற்கு போனாலோ அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என்பது ஜே.வி.பி யின் எச்சரிக்கையாகவுள்ளது.

ஆனால் ஒன்றிற்கு மேற்பட்ட தடவை சனாதிபதி சந்திரிகா ஆட்சியை விட்டு வெளியேற விரும்புபவர்கள் வெளியேறலாம் எனக் கூறியுள்ள போதும் ஜே.வி.பி அது குறித்து கண்டுகொண்டதாக இல்லை. தமக்குக் கூறப்பட்டது இல்லை என்பது போன்றே நடந்து கொண்டது.

ஜே.வி.பியைப் பொறுத்து அதன் நிலைப்பாடானது அரசாங்கத்தை விட்டு வெளியேறுதல் என்பதல்ல. "தவறான பாதையில் செல்லும் அரசாங்கத்தைத் திருத்துதல்'' என்பதாகவே உள்ளது. அதாவது ஜே.வி.பி யினர் இவ்வாறே கூறிக் கொள்கின்றனர்.

ஆகையினால் ஜே.வி.பி ஆட்சியை விட்டு வெளியேறப்போவதில்லை. தமக்கு இணக்கப்பாடு அற்ற விடயத்தை அரசாங்கம் மேற்கொள்வதை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாடு விசித்திரமானது. சுருக்கமாகக் கூறுவதானால் ஆட்சியாளர்கள் சனாதிபதி சந்திரிகாவோ, அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியினராகவோ இருப்பினும், ஆட்சிக் கொள்கை தமது என்பதே ஜே.வி.பி யின் நிலைப்பாடு.

இந்நிலை நீடிக்குமானால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹக்கீம் கூறியுள்ளது போல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அழிவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதாவது ஆட்சியாளர்கள் வேறு யாருடைய கைப்பாவையாக இருப்பின் அவர்களின் கட்சி அழிவது தவிர்க்க முடியாததே.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுதந்திரக் கட்சியின் அழிவைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் ஜே.வி.பி யினரை ஆட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும். ஜே.வி.பி யினரை வைத்துக் கொண்டு சுதந்திரக் கட்சியை பாதுகாத்தல் என்பது சாத்தியமற்றதாகும்.

ஆனால் மறுவளமாக ஜே.வி.பியை வெளியேற்றினால் அரசாங்கத்தை சனாதிபதி சந்திரிகாவால் பாதுகாக்க முடியாது என்பதும் வெளிப்படையானது. ஏனெனில் ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்படுமானால் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து ஆட்சியைக்கவிழ்க்க மாட்டாது இதற்கு அண்மைய அரசியலில் எடுத்துக்காட்டும் உண்டு.

மேல்மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விடயத்தில் ஐ.தே கட்சியுடன் இணைந்து செயற்படுவது போன்ற நிலை காணப்பட்டதைச் சுட்டிக்காட்ட முடியும். ஆகையினால் ஜே.வி.பியை சனாதிபதி வெளியேற்ற முற்படின் அடுத்த பொதுத் தேர்தல் தொடர்பான தீர்மானத்தை அவர் எடுத்ததன் பின்பே சாத்தியமாக முடியும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் ஜே.வி.பியை புறம் தள்ளுதல் என்ற ரீதியிலானதாக இருப்பதாக இல்லை. மாறாக ஜே.வி.பியை சாந்தமடையச் செய்தல்,அனுசரித்துப் போதல் என்ற ரீதியிலேயே செயற்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக மின்சார மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தை மீளப்பெற்றுக்கொண்டமையாகும்.

சனாதிபதி சந்திரிகாவின் இம்முடிவானது சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யின் அச்சுறுத்தல்களுக்குப் பணிந்து போயுள்ளார் என்றே கொள்ளலாம். அதுமட்டுமல்ல ஜே.வி.பி யின் 10,000 குளங்கள் புனரமைப்புத் திட்டத்தில் 1000 குளங்கள் புனரமைப்பு பூர்த்தி விழாவில் கலந்துகொண்டு பேசியிருக்கவும் மாட்டார்.

இந்த வகையில் பார்க்கையில் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யினர் விரும்பினால் ஆட்சியை விட்டு வெளியேறலாம் எனக் கூறியவை யாவும் பேச்சளவில் மட்டுமானதே. தவிர மனத்தளவிலானதாக இல்லை என்றே கொள்ள வேண்டியதாக உள்ளது. வேறு விதமாகக் கூறுவதானால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதில் காட்டும் அக்கறையை விட அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டவராக உள்ளாரென்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முடிவு இதுவாகவே இருக்குமானால் மற்றுமொரு முடிவிற்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இருக்கின்றார் என்பதே அர்த்தமாகும். அதாவது சனாதிபதி சந்திரிகா நாட்டை மீண்டும் யுத்தம் ஒன்றிற்குச் இட்டுச் செல்லத் தயாராகி விட்டார் என்பதே அர்த்தமாகும்.

ஏற்கனவே விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக தீவிரமான மறைமுக யுத்தம் ஒன்றை நடத்தி வரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, ஜே.வி.பி யின் இணக்கப்பாட்டுடன் ஆட்சியை நடத்த விளைவாரேயானால் நாட்டில் யுத்தமும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஏனெனில் ஒரு புறத்தில் மறைமுக யுத்தத்தினால் யுத்த நிறுத்த உடன்பாடு பலவீனப்பட்டுக் கொண்டு செல்கையில் மறுபுறத்தில் அரசியல் முயற்சிகள் குறிப்பாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மற்றும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான முயற்சிகள் அரசாங்கத்தினால் புறம் தள்ளப்படும் பட்சத்தில் விடுதலைப்புலிகளும் தவிர்க்க முடியாது தற்போதைய தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டியதாகவே இருக்கும்.

அதாவது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படாமலும், பொதுக்கட்டமைப்பு அமுலாக்காமலும் தற்போதைய சூழ்நிலையைப் பேணுதல் என்பது சாத்தியமற்றதாகு. இதனை விடுதலைப்புலிகளும் வெளிப்படுத்தாமல் இல்லை.

இதனைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் பி.பி.ஸி பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் தனது பேட்டியில் "மக்களின் நிலைப்பாட்டை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக எங்களுடைய தலைமைப்பீடம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற சூழ்நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தற்பொழுது காலக்கெடுவை குறிப்பிடாமல் விட்டாலும், நிலைமைகள் மிகவும் இறுக்கம் அடைந்து கொண்டே இருக்கின்றது" என்றார்.

அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகாவின் நிலை ஜே.வி.பி யின் நெருக்குதலுக்கு கட்டுப்பட்டதாகுமானால் நாடு யுத்தத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றதென்றே கொள்ளலாம்.

சனாதிபதி சந்திரிகா பொதுக் கட்டமைப்புக் குறித்து உரத்த குரலில் பேசினாலும், மின்சார சபை மறுசீரமைப்புப் போன்றவற்றில் அவரின் பின்வாங்கலானது ஆட்சி அதிகாரத்தில் அவர் காட்டும் பெரும் சிரத்தையையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அதாவது ஆட்சி அதிகாரத்திற்காகச் சுதந்திரக் கட்சியையும், நாட்டையும், சனாதிபதி சந்திரிகா அழிவுப் பாதையில் இட்டுச் செல்லத் தயாராகிவிட்டார் என்றே அர்த்தம் கொள்ளலாம்.

□

ஜெயராஜ்



மயூரி நினைவில்லத் திறப்புவிழாவில் தேசியத்தலைவர் அவர்கள்.

## 02.05.2005 - 08.05.2005




### 02

☞ சிறிலங்கா தலைநகர் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளரும், அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளரு மான மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் பூதவுடல் மட்டக்களப்பிலுள்ள ஆலைய டிச் சோலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



☞ மாமனிதர் சிவராமின் நினைவாக கிளிநொச்சியில் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

☞ தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டு. மாவட்ட இயக் குனர் ஜோய்பிரான்க்கும், அவரது சாரதியும் மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து இராணு வத்தினரால் கைது. அவர்கள் பயணம் செய்த வாகனமும், ஒரு தொகைப்பண மும் தடுத்து வைப்பு.

☞ பொலநறுவை வெலிக்கந்த குடாப் பொக்கணைப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இருவர் காயம்.

☞ மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைப் பிரதேச விடுதலைப்புலி களின் அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாத ஆயுதக் குழுதாக்குதல்.

☞பொல்காவல மெதலந்த எனுமிடத் தில் தனியார் பஸ்வண்டியொன்று விபத் திற்குள்ளாகியதில் இருவர் பலி, 21 பேர் காயம்.

☞ இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் ஷியாம் சரண் சிறி லங்காப் பிரதமர் மகிந்த ராஷபக்ஷ மற் றும் இலங்கை வெளிவிவகார அமைச் சின் செயலாளர் பாலிககார தலைமையி லான குழுவினர் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

☞ திருகோணமலை மாவட்ட கட்ட ளைத் தளபதி கேணல் சொர்ணம் சிறி லங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை.

☞ நாட்டுப் பற்றாளர் கந்தையா குல சேகரம் காலமானார்.

☞ இந்திய வெளியுறவுச் செயலரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து பேசினர்.

### 03.

☞மாமனிதர் பிரபல ஊடகவியலாளர் டி.சிவராமின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினர் அஞ்சலிக் கூட்ட மொன்றை நடத்தியுள்ளனர்.

☞ மட்டக்களப்புக்கு வடக்கே கிரானில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப் பட்ட நிலையில் சடலமாக மீட்பு.

☞ இரத்தினபுரி கலவானை ஐக்கிய தேசியக்கட்சி பிரதேசசபை உறுப்பினரும், பிரபல மாணிக்கக்கல் வியாபாரியு மான எச்.எம்.வசந்த "சர்ப்பய" எனப்படும் கும்பலால் வர்த்தக நிலையத்தில் வைத்து சுட்டுக் கொலை.

☞ மூத்த ஊடகவியலாளரும், இரா ணுவ ஆய்வாளருமான மாமனிதர் சிவரா மின் படுகொலையைக் கண்டித்து கொழும்பில் ஆர்பாட்ட ஊர்வலமொன்று இடம்பெற்றது.

☞ த[illegible] தேசியத்தலைவர் அவர் களினால் வி[illegible]ப்புண் அடைந்த போராளிக ளுக்காக மயூரி நினைவில்லம் திறந்து வைக்கப்பட்டது.

☞ விடுதலைப் புலிகள் அமைப்புடன் பொதுக்கட்டமைப் பொன்றைத் துரிதமாக அமைக்க வேண்டுமென கொழும்பு பண்டா ரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

☞ குமுழமுனைப் பிரதேச மக்கள் மணலாறு களமுனைப் பகுதிக்கு விஜயம் செய்து போராளிகளைச் சந்தித்து கலந்து ரையாடி உலர் உணவுகளையும் பரிமாறி னர்.

☞ கொழும்பு மகசின் சிறைச்சாலை யில் இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் மீது சிங்களக் கைதிகளால் தாக்குதல்.

### 04.

☞ சிறிலங்காவின் முப்படைகளின் தலைமை அதிகாரியும் கடற்படைத் தளபதியுமான தயாசந்தகிரி, வான்படைத் தளபதி இராணுவத் தளபதி ஆகியோர் மட்டக்களப்பிற்கு விஜயம்.

☞ சுன்னாகம் பேருந்து நிலையத்துக் கருகில் இடம்பெற்ற சிற்றூர்தி விபத்தில் குடும்பஸ்தர் தலைசிதறிப் பலி.

☞ ஊடகவியலாளரும், மாமனிதரு மான சிவராமின் கொலையைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா பாராளுமன்றத் தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

☞ திருகோணமலை மாவட்ட மூதூர் கட்டைப் பறிச்சான் பகுதியிலுள்ள புலிக ளின் முன்னரங்க நிலை மீது இனந்தெரி யாத நபர்கள் தாக்குதல்.

☞ மாணவர்களின் நலன் கருதி மல் லாவிப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் இரு மாணவர் இல்லங்கள் திறப்பு.

☞ தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகளில் ஒன்றான ஜெயந்தன் படையணியின் 12ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் மட்டக்களப்பில் தரவைப் பகுதி யில் அமைந்துள்ள ஜெயந்தன் படையணி யின் பிரதானதளத்தில் எழுச்சியுடன் இடம் பெற்றது.



☞மட்டக்களப்பு - வாழைச்சேனை யில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி முகாம் மீது இனந் தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டது.

☞ கரப்பொளப் பகுதியில் இராணுவத் தினரும் சேதவிரோதக் குழுவினரும் இணைந்து நடத்திய தாக்குதலில் போராளி கள் இருவர் வீரச்சாவு.

### 05.

☞தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குச் சொந்தமான மற்றுமொரு வாகனம் மன்னார் சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டது.

☞ வவுனியா பாவற்குளம் தாளிக் குளம் எனும் இடத்தில் தலை துண்டிக்கப் பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு.

☞ மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட் டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஐந்து பேர் மாவட்ட தமிழ் தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர்கள் தம்மை சந்திக்க வரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கூரை மீது உண்ணாவிரதத்தினை ஆரம்பித்தனர்.

☞ யாழ்.பொது நூலகத்திற்கு வருகை தந்த வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் டிரோன் பெர்னாண்டோவினை எதிர்த்து பொது மக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட் டது.




☞ கொழும்பிலுள்ள சிறிலங்கா இரா ணுவத் தலைமையகத்திற்கு முன்னால் சந் தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் என யுவதி ஒருவர் இராணுவத்தால் கைது.

☞ மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொம்மாந்துறைப் பகுதி யில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

☞ யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக பழைய பூங்கா வீதிக்கு திரும்பும் சந்தியி லுள்ள ஐந்து கடைகள் தீக்கரையாகின.

### 06

☞ களனி பல்கலைக்கழகத்தில் இரு மாணவக் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் மூன்று மாணவர்கள் காயம்.

☞ உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரால்ட் புத் தளத்திற்கு விஜயம்.

☞ கொழும்பில் படுகொலை செய்யப் பட்ட ஊடகவியலாளரும், மாமனிதருமான சிவராம் அவர்களின் கொலையைக் கண் டித்து பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கண் டனக் கூட்டம் இடம்பெற்றது.

### 07

☞ தமிழ் மக்களும், விடுதலைப் புலி களும் சனாதிபதியின் பொதுக் கட்டமைப் புத் தொடர்பான நோக்கத்தின் நேர்மைத் தனத்தில் பலத்த சந்தேகம் கொண்டுள் ளோம் என சு.ப தமிழ்ச்செல்வன் ரொய்ட் டர் செய்தித் தாபனத்திற்கு வழங்கிய செவ்வியில் தெரிவிப்பு,

☞ பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய கொழும் பில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத் தியது.

☞ பொருளாதாரத் தடைகள் தொட ரும் நிலையில் தீர்வு பற்றியும், பொதுக் கட்டமைப்பு பற்றியும் பேசுவதில் அர்த்த மில்லையென விடுதலைப்புலிகளின் திரு கோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் சம்பூர் கிழக்கில் நிகொட் அமைப்பினால் நிர்மாணிக்கப் பட்ட கமநலசேவைக் கட்டடத்திறப்பு விழா வில் தெரிவிப்பு.

☞ பிரபல இராணுவ ஆய்வாளரும், பத்திரிகையாளருமான மாமனிதர் சிவராம் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.மாவட்டத்தில் இரண்டு ஊடகவிய லாளர் சங்கங்கள் இணைந்து சவப்பெட்டி தாங்கிய எதிர்ப்புப் போராட்டம்மொன்றில் ஈடுபட்டனர்.

☞ மூதூர் கட்டைப்பறிச்சானில் அமைந் துள்ள விடுதலைப்புலிகளின் முன்ன ணிக் காவலரண் மீது இனந்தெரியாதோர் துப் பாக்கிச் சூடு

☞. சிறிலங்காவின் தலைநகர் கொழும் பின் புறநகர்ப்பகுதியான தெஹிவளையில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் தமிழ் இளைஞர் பலி.

☞ கவிஞர் புதுவை இரத்தினதுரை யின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சு களும்" நூல் வெளியீட்டு விழா பிரான்சில் இடம் பெற்றது.

### 08

☞ மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப் பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட உண் ணாவிரதப் போராட்டம் முடிவிற்கு வந்தது.

☞ இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தினால் சுனாமியினால் பாதிக்கபட்ட சிறார் களிற்கான சேமிப்புத்திட்ட வைபவம் கிளி நொச்சி மத்தியகல்லூரியில் ஆரம்பம்.

☞ படைய தொடக்கப் பயிற்சிக் கல் லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவினை யொட்டி நடாத்தப்படுகின்ற போட்டிகளின் இரண்டாவது போட்டியாக ஆண், பெண் போராளிகளுக்கிடையிலான சமதூர ஈரு ருளி ஓட்டப் போட்டிகள் இடம் பெற்றது.



☞ தீர்க்கமான முடிவெடுக்கும் சூழ் நிலையை தலைமைப்பீடம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரி விப்பு. பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற் படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுமானால் உங்களுடைய பதில் நடவடிக்கை எவ் வாறு இருக்குமென பி.பி.சி செய்தியா ளரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

☞ காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கிப் பலி.

# ஆறாண்டு சேவையை அன்புடன் ஏற்றுக்கொண்டு நூறாண்டு வாழ வாழ்த்துகிறோம் - முல்லை வலயம்

**நல்ல நிர்வாகி**

வன்னலமின்றி மென்னலங் கொண்டு
தன்னலங்கண்ட தன்னலமிலார்

**வலயத்தில் கல்வி**

விட்டமிலா விருட்சமாய்
பட்ட கல்வியும் தளைத்தன

**ஆசிரியர் வாண்மை**

புத்தெழுச்சியுடன் புதுயுகம் பெறவேண்டி
நித்தம் உழைத்தவர் வித்தகர் குருகுலம்

**தமிழுக்கு விழா**

கும்மி கோலாட்டம் குதித்தாடும் நாட்டுக்கூத்து
எம்மிடமுண்டென்று எடுத்தாடிய எல்லாளன்

**விளையாட்டு**

உலக விளையாட்டுக்களை
விலகாது வலயத்துள் வளர்த்து
தேசியத்தில் கால் பதித்த
ஆசியுடைய அதிகாரி



**சகலகலா வல்லவன்**

ஆடப்பாடப் தேடத் திரட்ட
நாடக்கூட வாடா மல்லிகை

**வலய வழச் செறிவு**

கட்டிடம் கணினி மட்டிலா ஆளணி
எட்டு மாவழமும் எங்கணும் கிடைத்தன
பொட்டுடன் முல்லை சிட்டெனப் பறந்தது
கட்டென இறைமை கல்விக்கு இருந்தது

**அனைவருக்கும் ஆங்கிலம்**

சீராய்க் கற்றதை சிறப்பாய்க் கொடுக்க
தேராய் உருண்டதை தெருக்களும் கூறும்

**ஆசிரியர் தின விழா**

ஆசிரியர் திறன்களை அரங்கிற்கு அழைத்து வந்து
பாசமுடன் மாணவர்க்கு பகிர்தளித்த நிறையலகு

**பண்ணிசைப் போட்டி**

பண்ணுடன் சுருதி கூட்டி பாடுவதில் பிழை திருத்தி
எண்ணிலா வெற்றி கண்ட யேசுவின் திருமகன்

**தேசிய எழுச்சி**

எழுச்சிப் பேரவையின் வழுவிலா ஆலோசகர்
வளர்ச்சிக்கு உழைத்தார் வாழ்நாள் பூராக

வலயத்தில் சேவை ஆரம்பம் 1998 — வலயத்தில் சேவை முடிவு 2005

## சேவை நலன் பாராட்டு விழா 11.05.2005

## முன்னாள் கல்விப் பணிப்பாளர்

## உயர் திரு. த. குருகுலராசா

நல்லாசானாய் இருந்து பண்பான பணிப்பாளராய் உயர்வு பெற்று முல்லை வலயக் கல்விப் பணிப்பாளராய் கடமையாற்றி புலம் மாறி சென்ற அறிவுப் பொக்கிசம் உயர் திரு.த.குருகுலராசா அவர்கள் கல்வியுலகில் தாண்டிச் சென்ற சில வரலாற்றுத் தடங்கள்.

கற்பவையெல்லாம் கற்றுமுடித்து இந்தியா கண்டு
இலங்கை வந்த எம் வித்தகன் கல்வியுலகில்
உதவியாசானாய் 03.11.1976 இல் ஊருக்கே ஓர்
உத்தமனாய் தர்மபுரம் ம.வியில் கால் பதித்தார்.

வளமான ஆசான் ஒருவனை சும்மா விடுவதா?
26.06.1980 இலே கல்வி வளநிலையப் பொறுப்புக்கள்
யாவும் மெதுவாய்க் கையேறின.

உதவியாசானாய் கடமையாற்றியவர் தொடர்ந்து
வரும் காலத்தில் பிரதி அதிபர் பொறுப்புக்களையும்
07.02.1984 இல் ஏற்கத்திடம் கொண்டார்.

அத்தோடு அரிய பதவியாம் கல்வி நிர்வாக சேவைப்
பதவியும் விரைவாய்க் கைக்கெட்ட கல்விக்கோர்
இலக்கணமாய் 01.09.1987 இல் தர்மபுரம் ம.வியின்
அதிபராய்
மெல்லக் கதிரையேறினார்.

இவரின் திறன் அறிந்த கல்வியுலகு 01.05.1988 இல்
கொத்தணியதிபராய் தன் ஆரம்ப படிக்கு உள்வாங்கியது.

14.08.1992 வரையான ஐந்து வருடமாய்

ஐம்பொறிகளையும்,
ஐம்புலன்களையும் கல்விக்கென தன்னையே வித்திட்ட
வித்தகனின்
அர்ப்பணிப்பைக் கண்ட கிளி/மாவட்டம் முற்றாய் தன்
இறக்கையினுள்
உதவிக் கல்விப் பணிப்பாளராய் சிறைப்பிடித்துக்
கொண்டது.

வஞ்சமில்லா வெள்ளையுள்ளம் கொண்டநல்நாவானுக்கு
இ.க.நி.சேவை தரம் II கிட்ட முல்லை மாவட்டத்தின்
கல்விக்கோர் முத்தென
மாவட்டக் கல்விப் பணிப்பாளராய் மாவட்டத்தின் கல்விப்
பொறுப்பை
15.04.1998 இல் மனதார ஏற்றார்.

இவ்வாறு வரும் நாளில் 01.10.1998 முதல் தற்போதைய
எம் வலயம்
முல்லைக் கல்வி வலயமாக பிரிக்கப்பட்டு எம் அன்பிற்கும்
பெருமதிப்பிற்குமுரிய குலம் சேர் அவர்கள் வலயக் கல்விப்
பணிப்பாளர் பதவியை 28.02.2005 வரை ஆற்றி
என்றென்றும்
எம் மனங்களிலகலா பல பொற்தடங்களைப் பதித்து
கிளி.மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளராய் புலம்
மாறினார்.

**எச்சத்திலும் எழுவோம்**

சுனாமி எச்சங்களை இனங்கண்டழைத்து
அநாதையில்லையென்று அரவணைத்த மாமனிதர்

அழியாத கோலங்கள் கிளிநொச்சியில் வளரும்
குளிர்ச்சியான இல்லறம் வளர்ச்சியுடன் வாழும்.

"நன்றி"

கல்விப் புலம்,
முல்லைக் கல்வி வலயம்,
முல்லைத்தீவு

சி 11871

# காவல்துறைக்கு உளவு பார்த்த ஆந்திர இளைஞர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஆந்திரமாநிலம் கரீம் நகர் மாவட்ட முஸ்தாடாத் மண்டலம் அவனூர் கிராமத்தில் காவல் துறையினருக்கு உளவு பார்த்த தாக இளைஞர் ஒருவர் நக்சலைட் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் வீட்டில் தனியாக இருந்தார். அப் போது அங்கு வந்த நக்சலைட் டுகள் மூன்று பேர் அவரை வீட்டிற்குள் ளிலிருந்து வெளியே இழுத்து வந்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பி ஓடி விட்டனர். இது குறித்து காவல் துறையினர் விசாரணை நடத்தி னார்கள். விசாரணையில் காவல் துறைக்கு உளவு சொன்னதால் அப்துல் நசிருதீன் சுட்டுக் கொல் லப்பட்டது தெரியவந்தது. இதை யொட்டி நக்சலைட்டுகளை காவல் துறையினர் வலைவீசித் தேடி வரு கின்றனர்.

# சியாசின் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா-பாக்.இடையே விரைவில் பேச்சு

(புதுடில்லி)

சியாசின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இந்தியா-பாகிஸ்தான் இடையே விரைவில் பேச்சு வார்த்தை நடக்கவுள்ளது என்று இந் திய அதிகாரிகள் தெரிவித் துள் ளனர். உலகிலேயே சியாசின் மலைப் பகுதி மிகவும் உயர மானது. இந்தியா- பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இருப்பதால் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இங்கு இந்தியா-பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் அவரவர் எல்லைப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால், பனிப்பிரதேசமாக இருப்பதால் இராணுவ செலவு அதிகமாக உள்ளது. இதனால், சியாசின் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா-பாகிஸ்தான் இடையே இந்த மாதக்கடைசியில் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது என்று பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்யா வுக்கு விமானத்தில் சென்றபோது நிருபர்களுக்கு பேட்டியளிக்கை யில் தெரிவித்தார்.

***பீகாரில் மீண்டும் தேர்தல்;***
***மா.க.கட்சி வற்புறுத்தல்***

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வரும் பீகாரில் மீண்டும் சட்டபேரவைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத் துள்ளது.

இக்கட்சியின் பொதுச்செயலர் பிரகாஷ் காரத் பாட்னாவில் செய்தி யாளர்களிடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இவ்வாறு கூறினார். ராஷ் டிரிய ஜனதா தள கட்சியின் கடந்த ஆட்சிக்காலத்தை ஒப்பிடும் போது தற்போதைய குடியரசுத் தலை வரின் ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு விவகாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்றார்.


## அறிவித்தல்

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 23.05.2005 திங்கள்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் போது வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 19.05.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய வளவில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கேள்வி முறையில் நிலம் வழங்கப்படும்.

23.05.2005 திங்கள் பொங்கல் உற்சவத்தன்று வாகனங்கள் எதுவும் உள் அனுமதிக்கப்பட மாட்டாது.

*தலைவர்,*
*வற்றாப்பளை கண்ணகி*
*அம்மன் ஆலயம்.*

(சி.11872)

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 23.05.2005 திங்கட்கிழமை

மேற்படி பொங்கல் உற்சவம் தொடர்பான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பின்வரும் சேவைகளை வழங்க தகுதியானவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. மின்ஒளி வழங்குவதற்கு 850 ரியூப் பல்ப்புக்கள் தேவைப்படுகின்றன. 200 ரியூப் பல்ப்பிற்கு குறையாமல் பொருத்தக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மின் பிறப்பாக்கி பரிபாலன சபையால் வழங்கப்படும்.

02. 20 ஒலிபெருக்கி இணைப்பு வழங்கக் கூடியவர்களிடமிருந்தும் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் மேற்படி கூறுவிலைகளுடன் 15.05.2005 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஆலயத்திற்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*தலைவர்,*
*வற்றாப்பளை கண்ணகி*
*அம்மன் ஆலயம்.*

(சி.11873)

## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை
அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில, தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்

**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல் 15 ஆம்திகதிவரை

**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

**சிறப்பு விலைக்கழிவு**

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11864)

## அறிவித்தல்

## வடக்கு ,கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,தலைமைச் செயலகம்,கிளிநொச்சி.

## வருடாந்த பொதுக் கூட்டம்

| இல. | மாவட்டம் | இடம் | திகதி | நேரம்(பழையது) |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு மாவட்டம் | மாவட்டச்செயலகம். | 21.05.2005 | 10.00 |
| 02. | மன்னார் மாவட்டம் | வை,எம்,சி.ஏ.மண்டபம் | 25.05.2005 | 10.00 |
| 03. | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்.பல நோ. கூட்டுறவு சங்கம் கேட்போர்கூடம் கே.கே. எஸ. வீதி. | 27.05.2005 | 10.00 |
| 04. | கிளிநொச்சி மாவட்டம். | மாவட்டச்செயலகம். | 28.05.2005 | 10.00 |
| 05. | வவுனியா மாவட்டம். | உள்ளூராட்சி,உ.ஆணையாளர் மண்டபகேட்போர் கூடம், பூங்கா வீதி,வவுனியா. | 29.05.2005 | 10.00 |

***மேற்படி திகதிகளில் குறிப்பிட்ட மாவட்டங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் சங்கத்தில் பதிவு செய்த சகல ஒப்பந்தக்காரர்களும் தவறாது கலந்து கொண்டு புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.***

***செயலாளர்.***

(சி.11951)

## நூற்றாண்டு நிறைவு 1904

நலமே
நூற்றாண்டு 1904
CENTENARY 2004
චාවකච්චේරි හින්දු මහ විදුහල
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
CHAVAKACHCHERI HINDU COLLEGE

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி

*பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக*

*.யாழ்ப்பாண மின்னகத்தின் (LG-அபான்ஸ் காட்சிக் கூடம்.

*.அன்னை நாகாபூட் சிற்றியின் நீல்கமால்-பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்.

*. குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் மோட்டார் சைக்கிள் காட்சிக்கூடம்.

*. IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக்கூடம் *யாழ்.CD-City-இன் காட்சிக் கூடம்


இன்னும் பல காட்சிக் கூடங்கள் இங்கு-சிறப்புத்தள்ளுபடி விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். சிறுவர்களுக்குப் பெருவிருந்தாக *மெரிக்கோரவுண்ட் *பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

**காலம்: 2005- மே 12 ஆம், 13 ஆம் 14 ஆம் நாள்**
**இடம்:- பாடசாலை வளாகம்**

**பாடசாலை அதிபர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**பாடசாலைச் சமூகம்.**

(சி.11874)

## பாகிஸ்தானின் சகலதுறை வீரர் மாலிக் பந்து வீசுவதற்கு ஐ.சி.சி. அனுமதி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான சொகைப் மாலிக் மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் பந்துவீச அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தென்னாபிரிக்க செய்தி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

இந்தத் தகவலைப் பாகிஸ்தானிய கிரிக்கெட் சபை அதிகாரியொருவர் மேற்படி செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார். மாலிக்கின் பந்து வீச்சு தூஸ்ரா முறைக்குட்பட்டது எனவும், அதனால் கடந்த ஒக்ரோபர் மாதம் சிறிலங்காவுடனான போட்டியின் பின்னர் அவருக்குத் தடைவிதிக்கப்பட்டது. எனினும் கடந்த மாதம் நடைபெற்ற இந்தியாவுடனான தொடரில் அவர் பந்து வீசியபோது அது தூஸ்ரா முறை என்று கருத முடியாதெனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவரின் பந்து வீச்சுப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பெறுபேறாக அவர் 15 பாகை கையை வளைத்து பந்து வீசலாமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர் வரும் வெள்ளியன்று மேற்கிந்தியத் தொடருக்கான அணியில் இணைந்து கொள்வார்.

## சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு விரைவில் புதிய பயிற்சியாளர்





எதிர்வரும் ஜூலையில் சிறிலங்காவில் நடைபெறும் மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட்போட்டிக்குத் தயாராகும் வகையில் தமது அணியினருக்கு பயிற்சி வழங்க விரைவில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருப்பதாக சிறிலங்கா கிரிக்கெட்டின் இடைக்கால சபைத் தலைவர் ஜயந்ததர்மதாஸ தெரிவித்துள்ளார்.இப்பதவிக்காக அவுஸ்திரேலியாவின் டொம் மூடி,இங்கிலாந்தின் இயன்செப்பல் ஆகிய இருவரில் ஒருவரை இந்த வாரத்தினுள் தேர்ந்தெடுக்க முடிவு செய்துள்ளனர்.

தற்போது இந்திய அணியும் பயிற்சியாளர் ஒருவரைத் தேடும் நிலையில் இருக்கின்றபோதிலும் அங்கு நான்கு பேரை ஏற்கெனவே தெரிவு செய்திருப்பதாகக் கூறிய தர்மதாஸ எமக்கான பயிற்சியாளரை நாம் விரைவில் தெரிவு செய்ய வேண்டிய நிலையிலிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.


## உலக 11பேர் கிரிக்கெட் அணியில் இங்கிலாந்தில் இருந்து பிளின்டொப்



வரும் ஒக்ரோபரில் நடைபெறும் சுனாமி நிதி கிரிக்கெட் ஒருநாள், மற்றும் டெஸ்ட் போட்டியில் உலக 11பேர் அணியில் ஒரேயொரு இங்கிலாந்து வீரர் அங்கம் வகிக்கிறார். எனினும் ஸ்ரீவ் ஹார்மிசன், அன்ருஸ்ரோர்ஸ் மைக்கல்வோன் ஆகியோரும் 30 பேர் கொண்ட அணியில் இடம் பிடிக்கின்றனர்.

உலக 11பேர் அணி வரும் ஒக்ரோபர் ஐந்து,ஏழு, ஒன்பது ஆகிய திகதிகளில் மூன்று ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடும். அதன் பின்னர் ஆறு நாட்களைக் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டி தொடங்கும். உலக 11பேர் அணியில் பாகிஸ்தான், இந்தியா, சிறிலங்கா, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளின் வீரர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை பங்களாதேஷ், கென்யா, சிம்பாப்வே வீரர்கள் யாரும் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மன் ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் ஹெனின்



ஜேர்மன் ஓபன் டென்னிஸ் தொடரில் ஜஸ்டின் ஹெனின் சம்பியன் பட்டம் வென்றார். ஜேர்மனிலுள்ள பேர்லின் நகரில் இத்தொடர் நடந்தது. கடந்த ஞாயிறன்று நடந்த இறுதிப் போட்டியில் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின், ரஷ்யாவின் நாடியா பெட்ரோவவை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை எளிதில் வென்ற ஹெனின், இரண்டாவது செட்டில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். பின்னர் மூன்றாவது மற்றும் கடைசிச் செட்டில் சுதாகரித்து ஆடி 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்.

இவர் 6-3,4-6, 6-4 என்ற செட்களில் நாடியாவை வீழ்த்திச்சம்பியன் பட்டம் கைப்பற்றினார். ஹெனின் கைப்பற்றும் 22 ஆவது சம்பியன் பட்டம் இது.

## ரோம் மாஸ்ரர்ஸ் டென்னிஸில் நடால் சம்பியன் பட்டம் வென்றார்

ரோம் மாஸ்ரஸ் டென்னிஸ் தொடரில் ரபெல் நாடல் சம்பியன் பட்டம் வென்றார்.

இத்தாலியின் ரோம் நகரில் இத்தொடர் நடந்தது. இறுதிப் போட்டி கடந்த ஞாயிறன்று நடந்தது. இதில் 18 வயதான ஸ்பெயினின் ரபெல் நாடல்,ஆர்ஜென்டீனாவின் கில்லர் மோகோரியாவை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்கள் இடையே கடும் போட்டி நிலவியது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் நான்கு மணி நேரம் 14 நிமிடங்கள் போராடிய நாடல் 6-4,3-6,6-3,4-6,7-6, என்ற நீண்ட செட்களில் கொரியாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.இந்த ஆண்டில் இவர் பெறும் மூன்றாவது சம்பியன் பட்டம் இது. தவிர இத்தொடரில் குறைந்த வயதில் சம்பியனாகும் மூன்றாவது இளம் வீரர் என்ற பெருமை பெற்றார். தொடர்ந்து வெற்றிகள் குவித்து வரும் நாடல், பரிசில் வரும் 23 இல் தொடங்கவிருக்கும் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரிலும்அசத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது.






மட்ரிட் நகரில் நடந்த ஸ்பானிஸ் லீக் போட்டியில் ரியல் மட்ரிட் 5-0 என்ற கோல் கணக்கில் ரேசிங் சான்டன்டர் அணியைவீழ்த்தியது. இதில் ரியல் மட்ரிட்டின் மைக்கேல் சால்கடோ (வலது),சான்டன்டர் அணியின் பெர்டின் இருவரும் பந்தைத் தட்டிச் செல்ல முற்படுகின்றனர்.

## இந்தியாவின் நட்சத்திர கால்பந்து வீரர் பாய்ச்சங் பூட்டியா உடல் நலம் பாதிப்பு

உடல் எடைதிடீரெனக் குறைந்ததால் பாய்ச்சங் பூட்டியாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர கால்பந்து வீரரான பூட்டியா, ஈஸ்ட் பெங்கால் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்தில் துர்க்மெனிஸ்தான் சென்ற ஈஸ்ட் பெங்கால் அணி ஏ.எப்.சி., கோப்பைக்கான போட்டியில் பங்கேற்கிறது. இத்தொடரின்போது பூட்டியாவுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. பின்னர் வயிற்றுவலி தொடர, பாகிஸ்தானுக்கு எதிரான தொடருக்குத்தேர்வு செய்யப்படவில்லை. இவரது உடல் எடை ஒரு மாதத்தில் 7.5 கிலோ குறைந்து விட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் கொல்கத்தாவிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மிகுந்த களைப்பாக இருக்கும் இவர், இரண்டு நாட்கள் தங்கியிருந்து சிகிச்சைமேற்கொள்ள வேண்டுமென டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து ஈஸ்ட் பெங்கால் அணியின் டாக்டர் தாஸ்குப்தா கூறுகையில்,"பூட்டியாவின் உடல்நிலை குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.நன்றாகத்தான் இருக்கிறார்.

திடீர் எடைகுறைவு, பலவீனமாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டறியப் பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளவுள்ளோம். இதற்காகத்தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்" என்றார்.



இங்கிலாந்தின் பர்ன்ஸ்லே நகரில் நடந்த பெண்களுக்கான சர்வதேச கால்பந்து போட்டியில் இங்கிலாந்து 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நோர்வே வீராங்கனைகளின் நெருக்கடியைச் சமாளித்து பந்தை தட்டிச் செல்ல முனைகிறார் இங்கிலாந்தின் ரேச்சல்யான்கி.

## மேஜர் மாறன் ஞாபகார்த்த கரப்பந்துப்போட்டி நேற்றைய இரவுப் போட்டி இன்று நடைபெறும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயலினால் கொல்லப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப் பெற்றுவந்த மேஜர் மாறன் நினைவான கரப்பந்தாட்டப் போட்டிகளில் பத்தாம் திகதிப்போட்டிகள் இன்று நடைபெறும் என தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.





கிளிநொச்சி அரைக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தைப்பெற்ற இராமநாதபுரம்மேற்கு அ. த. க. பாடசாலையின் 17,15 வயதுப் பிரிவு அணிகள்.

## பாடசாலை அணிகளுக்கிடையிலான அரைக்கோட்ட கரப்பந்தாட்டப்போட்டிகள்

கிளிநொச்சி அரைக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிளி.ம.வி. அணி, கிளி.மத்தியகல்லூரி அணி, திருவையாறு ம.வி. வட்டக்கச்சி ம.வி. கனகாம்பிகைக்குளம்,இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம் மேற்கு ம.வி. ஆகிய பாடசாலையில் இருந்து 15,17,19, வயதுப் பிரிவு அணிகள் பங்கு கொண்ட போட்டியில் 15வயதுப் பிரிவில் இராமநாதபுரம் மேற்கு ஆண்கள் அணியும், திருவையாறு ம.வி.பெண்கள் அணியும்,17 வயதுப் பிரிவில் இராமநாதபுரம் மேற்கு ஆண்கள் அணியும், திருவையாறு பெண்கள் அணியும், 19 வயதுப் பிரிவில் கிளி. மத்திய கல்லூரி ஆண்கள் அணியும் வட்டக்கச்சி ம.வி.பெண்கள் அணியும், வெற்றி பெற்றன. இறுதிப்போட்டி எஞ்சிய பாடசாலை அணிகளில் முதலிடத்தைப் பெற்ற அணிகளுடன் இவ் அணிகள் மோதும் (12)





மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று மாகாணமட்ட உடற்பயிற்சிப்போட்டிக்குத் தெரிவான கொக்குளாய் அ. த. க. பாடசாலை மாணவ, மாணவி அணிகள்.


## மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு கொக்குளாய் அ.த.க.பாடசாலை தெரிவு

முல்லை மாவட்டத்தின் மாகாணமட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் இடத்தை ஆண்கள்,பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் கொக்கிளாய் அ.த.க பாடசாலையும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயமும், ஆண்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலையும் மாகாணமட்ட உடற்பயிற்சி போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டமெய்வன்மை திறனாய்வு போட்டி எதிர்வரும் 18,19,ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறுமென முல்லை மாவட்ட விளையாட்டு குழு செயலாளர் மைக்கல் திலகராஜா தெரிவித்துள்ளார். (05)

## சிந்தனைக்கு



மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத்துறவறம்; அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-05-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@yahoo.com


## விளைவுகள் உணரப்படுவதில்லை!

மட்டக்களப்புச் சந்திவெளியில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு, தடியடி போன்றவை யுத்த நிறுத்தம் மோசமானதொரு கட்டத்தை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கின்றதென்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்த்தேசிய வாதிகளுக்கும், எதிராக ஒரு மறைமுக யுத்தத்தை தீவிர முனைப்புடன் நடாத்தி வருகின்றதென்பதை அண்மைக் கால நிகழ்வுகள் தெளிவாகவே வெளிக்காட்டுபவையாகவுள்ளன. கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், எல்லை ஓரங்களிலும் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், தமிழ்த்தேசிய வாதிகள் மீது வடக்கு- கிழக்கிற்கு வெளியிலும் நடத்தப்படும் தாக்குதல்கள் என அவை முனைப்பு பெற்றவையாகவுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளி[illegible] பரும்பாலும், சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரும், அவர்களின் ஆதரவில் இயங்கும் தமிழின விரோதக் குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன. இதை சிறிலங்கா அரசாங்கம் மறுப்பதும்,தமிழ்மக்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்காணிப்புக் குழு ஆதாரமில்லையென கைவிரிப்பதும் வழமையான விடயங்களாகிவிட்டன.

ஆனால் நீண்டதான இம்மறைமுக யுத்தம் தொடர்கையில் அண்மைக் காலத்தில் நேரடியாக ஆயுதப் படையினர் தமிழ்மக்களை அச்சுறுத்துதல் அன்றி தாக்குதல் போன்ற சம்பவங்களும் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இந்த வகையில் சந்திவெளியில் பொதுமக்கள் மீதான தாக்குதல் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்துவது ஒன்றும் புதிதல்ல அதாவது விமானக் குண்டு வீச்சில் இருந்து துப்பாக்கிச் சூடு வரையில் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டுள்ளது. ஆகையினால் இராணுவம் நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதென்பது மட்டுமேஇச் சம்பவத்தில் முக்கியத்துவம்மிக்கது.

ஏனெனில் இச் சம்பவத்தின் மூலம் மறைமுக [illegible]ரில் இருந்து விடுபட்டு நேரடியாகவே ஒடுக்கு முறைகளுக்கு அ[illegible]ம் தயாராகி விட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. அவ்வா[illegible] இல்லாது விட்டால் இத்தகையதொரு தாக்குதலை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க மாட்டாது.

ஏனெனில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது எவருமே வன்முறையில் இறங்கியதாகத் தகவலில்லை. அவர்கள் இராணுவ முகாமை அகற்றக்கோரி சாத்வீக ரீதியிலேயே போராட்டம் நடத்துகின்றனர். அத்தோடு போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஆகையினால் போராட்டம் நடத்தியவர்களைக் கலைந்து போகச் செய்யவோ அன்றி விலகிச் செல்லுமாறு செய்வதற்கு வேறு மார்க்கங்கள் உண்டு. அதற்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய தேவை எதுவுமே இல்லை. ஆகையினால் இத் துப்பாக்கிப் பிரயோகம் என்பது பதற்றத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதென்றே கூறலாம்.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் படிப்படியாக யுத்தத்தை நோக்கி நாட்டை நகர்த்திச் செல்ல முற்படுவதாகவே எண்ணவைக்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடில் யுத்த நிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க எந்தவித முன்னேற்ற கரமான நடவடிக்கையும் மேற்கொண்டதாக இல்லை.

இவ்விடயம் தொடர்பாக விமர்ச்சிக்கப்பட்டு வந்த போதும் அரசாங்கம் மறுப்பளித்துவிடுவதும். சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிப்பதும் வழமையாகிவிட்டது.

இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக தொடர்ச்சியாக தமிழ்மக்கள் சாத்வீகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். சந்திவெளிச் சம்பவத்தைக் கண்டித்து ஹர்த்தால்கள், பேரணிகள் என்பவற்றை நடத்தியுள்ளனர். பல தரப்பிற்கும் மகஜர்களும் அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால் இவை குறித்து சிறிலங்கா ஆட்சியாளர்கள் என்றுமே அக்கறை கொண்டதில்லை. ஆனால் சாத்வீகப் போராட்டங்கள் புறந்தள்ளப்பட்டால் ஏற்படப்போகும் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்பதைச் சிறிலங்கா அரசு மறந்து விடுதல் கூடாது

# அமைதிக்காலத்தைச் சிதறடிக்கும் அரசின் தொடர் முயற்சிகளில் மோசமானது

## மட்டு.துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்திற்குக் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா அரசபடைகளால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித் தனமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சமாதானச் செயல்முறைகளில் அபார நம்பிக்கை கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைதிக்காலத்தைச் சிதறடிக்கும் அரசின் தொடர் முயற்சிகளின் உச்சமானதும், மோசமானதுமாகும் என கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கையளித்துள்ள கண்டன மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினதும், அரச ஆதரவு பயங்கரவாதிகளாலும். மேற்கொள்ளப்பட்டுவரும் மனித நாகரிகத்திற்குப் புறம்பானதும் ஆத்திரத்தையூட்டி சமாதானச் செயல்முறையைச் சாகடிக்கக் கூடியதுமான இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதற்குச் சர்வதேச அரசுகளும். இராஜதந்திரிகளும், புத்திஜீவிகளும் உலக மானிடதர்மத்தின் சார்பாக குரல் கொடுக்கவேண்டும். அத்துடன் சிறிலங்கா அரசை இத்தகைய வன்முறைகளில் ஈடுபடவிடாது தடுப்பதுடன், சமாதான சகவாழ்வுக்கான ஊக்குவிப்பையும் சர்வதேச அரசியல் வன்முறைகளுக்குட்பட்ட இராஜதந்திர,தார்மீக அழுத்தங்களை சிறிலங்கா அரசு மீது பிரயோகிக்குமாறு வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட தமிழ் மாணவா ஒன்றியம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க புதுக்குடியிருப்பு வதிவிடப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில்

அமைதி சமாதானம் என்று நம்பியிருந்த எம்மீது மீண்டும் அரசு காட்டுமிராண்டித்தனம் செய்கின்றது. மாணவர் சக்தி மாபெரும் சக்தி எனபதை சிறிலங்கா அரசு உணரத் தவறியவிடத்து. நீதிக்குத் துப்பாக்கி என்று நினைக்கும் அரச சிந்தனை இதுவரை மாறவில்லை, மாணவர்கள் குரலை எதிரியின் குரலாக நோக்கும் அரசின் இனவாதம் இதுவரை குறையவில்லை ஆதலால் மட்டக்களப்பில் 09.05.2005 ஆம் திகதி நடந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். மீண்டும் அரசு மாணவர் மேல் ஆயுத கலாச்சாரத்தை புகுத்தினால் மாணவர் சக்தியின் மாபலத்தை காட்டுவோம் என்பதை நீங்கள் சர்வதேச வழியாக இலங்கை அரசிற்கு உணர்த்துவீர்கள் என்பதை பணிவுடன் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்டக் கல்விச் சமூகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்துளள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாணவ்களே எம் எதிகால சந்ததி. அவர்கள் எக்காரணம் கொண்டும் துன்புறுத்தப்படலாகாது. சிறுவர் மீதான வன்முறையை ஒழிப்பதில் ஐ.நா சிறுவர் உரிமை சாசனம் அக்கறை கொண்டுள்ளது. இந்த உரிமை சிறிலங்கா பாதுகாப்புப் படைகளால் மோசமாக மீறப்பட்டு மாணவச் சிறார்களின் மீது வன்முறையைக்கட்டவிழ்த்து விட்டதன் மூலம் ஐ.நா சிறுவர் உரிமை சாசனத்தையும் கழித்துக் காற்றில் பறக்கவிட்டுள்ளது.

இவ்வாறான மனித உரிமை மீறலை உடனடியாக நிறுத்திப் புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளின் பிரகாரமும், ஐ.நா சிறுவர் உரிமை சாசனத்தின் பிரகாரமும் பொதுமக்களினதும், சிறுவ்களினதும் வாழ்வுரிமை பேணப்படுவதை உத்தரவா தப்படுத்த வேண்டுமென நாம் வேண்டு கோள் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைதியான முறையில் சுலோகங்களை ஏந்துதல் மறுக்கப்பட முடியாத சனநாயக உரிமையாகும்

### — வாழைச்சேனை சம்பவத்தைக் கண்டித்து ம.உ.செயலகம் அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

அமைதியான முறையில் அதிகார பீடத்திற்கு எதிராக சுலோகங்களை ஏந்துதல் எக்காலத்திலும் மறுக்கப்பட முடியாத அடிப்படை சனநாயக உரிமையாகும். ஆயுதமற்ற மக்கள் தங்கள் அடக்குமுறை நிலையை மாற்றுவதற்காக கையாளக்கூடிய ஒரே மார்க்கம் இதுவாகும். அமைதியான முறையின் ஊடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது முதன்மையான கருவியுமாகும். இவ்வாறு வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செய[illegible]கம் வாழைச்சேனையில் போரா[illegible]ம் நடத்திய மக்கள் மீது சிறிலங்காப் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சர்வதேச சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் வடக்குக் கிழக்கு மக்கள் அடக்குமுறைகளைச் சமாதான வழியில் தீர்க்கும் நடைமுறைகளை முழுமனதுடனும், நம்பிக்கையுடனும் முன்னெடுக்கின்றனர்.

சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் தங்கள் எதிர்ப்பை அமைதியான முறையில் எடுத்துச் சென்று மாற்றங்கள் கொண்டுவரலாம் என்று நினைத்தனர். தங்களது நாளாந்த வாழ்க்கையில் இராணுவத்தால் ஏற்படுத்தப்படும் தொல்லைகளைக் கடந்த பல மாதங்களில் மக்கள் அமைதி வழியில் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இப்படியான காலங்களில் பல தடவைகள் இலங்கை இராணுவத்தின் ஆயுத அடக்குமுறைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

இத்தகைய சமாதான ஊர்வலங்களை நடத்தும் மக்களை மனிதாபிமானமற்ற வகையில் சுட்டுக்கொன்றால் மக்கள் எங்கே செல்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு,ச)

# சிவராம் கொலை தொடர்பில் சுதந்திர விசாரணைக்குழு தேவை

### எரிக் சூல் ஹெய்மிடம் ஊடக அமைப்பு கோரல்

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலை தொடர்பாக சுதந்திர விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எல்லைகளற்ற பத்திரிகை ஆணைக்குழு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடமும், யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரிடமும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- பத்திரிகை சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சண்டைகளற்ற நிலை மாத்திரம் அமைதி என்று அர்த்தப்பட்டுவிடாது. சிவில் சமூகத்தின் சுதந்திரமான பணி, அவர்களின் இயல்புநிலை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் மூலமே நிலையான அமைதியை உருவாக்கமுடியும். கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பில் நாம் கண்டு கொண்ட அனுபவங்களின்படி, சிவராம் கொலையாளிகளை அரசு நீதியின் முன்நிறுத்தும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. ஆகவே சுதந்திர விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொண்டு சிவராம் கொலை தொடர்பான சூத்திரதாரியை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும .ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வர நேரடியாகத தலையிட்டு ஆவன செய்யுமாறு கடந்த 2004 ஆம் ஆண்டு ஜுலை மாதம் எல்லைகளற்ற பத்திரிகை ஆணைக்குழு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. சிவராம் கொலை தொடர்பில் நோர்வே அரசு, சிறிலங்காவின் அமைதி முயற்சிகளின் அனுசரணையாளர் என்ற வகையில், கண்டனம் தெரிவிக்காதமை குறித்த நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம். என அவ் அமைப்புத் தெரிவித்துள்ளது.

## சிவராமின் படுகொலையைக் கண்டித்து வவுனியாவில் மௌனப் பேரணி

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலையினைக் கண்டித்து வன்னி மாவட்ட செய்தியாளர் சங்கம் நேற்று வவுனியாவில் கண்டன மௌனப் பேரணியை நடத்தியுள்ளது.

இதில் ஊடகவியலாளர் சிவராமின படங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

இறம்பைக்குளம் அந்தோனியார் தேவாலய முன்றலிலிருந்து ஆரம்பித்த மௌனப் பேரணியானது கடை வீதி வழியாக மணிக்கூட்டுச் சந்தியினைச் சென்றடைந்து கச்சேரி வளவில் முற்றுப்பெற்றது. சிறிலங்கா சனாதிபதிக்கான மனு மாவட்ட அரச அதிபர் சி.சண்முகத்திடம் கையளிக்கப்பட்டது. செய்தியாளர்கள் மீதான தாக்குதல்கள், மிரட்டல்கள் படுகொலைகள் போன்றவை உடன் நிறுத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வன்னி மாவட்ட செய்தியாளர்கள் சங்கம் நடத்திய இந்த மௌனப் பேரணியில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர், தேசிய எழுச்சிப் பேரையினர், வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின், வ்த்தக சங்கம், பொது அமைப்புகளுடைய பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பல்கலைக் கழக மாணவர்கள், கல்வியல் கல்லூரி மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.இப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு துணியினால் தங்களுடைய வாய்களை கட்டிக்கொண்டு மும்மொழிகளிலும் எழுதப்பட்ட வாசக அட்டைகளை ஏந்திச் சென்றனர். (21)



திருகோணமலையில் ஹர்த்தால்





புதுக்குடியிருப்பில் பேரணியும், மகஜர் கையளிப்பும்

# பொதுக்கட்டமைப்புக் குறித்து இந்தியாவில் சந்திரிகா பேசுவார்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதிப்பங்கீடு தொடர்பான பொதுக் கட்டமைப்புப் பற்றிய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள இந்திய அரசின் அழைப்பின் பேரில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் சனிக்கிழமை இந்தியாவுக்கு செல்லவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் சிறிலங்கா வந்திருந்த இந்திய வெளிவிவகார செயலாளர் தனது விஜயம் குறித்த அறிக்கை ஒன்றை தனது அரசிடம் சமர்ப்பித்தார். இதனையடுத்து அடுத்த மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் சிறிலங்காவுக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு சிறிலங்கா அரசுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார் என்று இந்தியத் தரப்பிலிருந்து செய்திகள் வெளியாகின.

கடற்புலிகள்,புலிகளின் வான்படை விவகாரம் குறித்து இந்தியா அதிருப்தி தெரிவித்து அறிக்கை விடுத்ததன் பின்னணியில் அந்நாட்டு அமைச்ச ரின் வருகை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர்-இந்தியாவுக்கு சென்றுதானே நேரடியாக இந்திய அரசுத்தலைவர்களுடன் புலிகளுடன் தனது அரசு மேற்கொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஆலோசனை பெறவுள்ளார் என்று தெரியவந்துள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை இந்தியா செல்லவுள்ள சனாதிபதி சந்திரிகா அங்கு இரண்டு நாட்கள் தங்கியிருந்து பிரதமர் மன்மோகன் சிங்,காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியாகாந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கக்கூட்டம்

வடக்குக்கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களிற்கான சிறப்புக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி,முல்லைத்தீவு: மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள் தவறாது பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கின்றனர். நிரந்தர நியமனம் தொடர்பான விபர அறிவிப்பு வெளியானதன் பின்னர் எவரும் சங்கத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியாது என்பதால் இக்கூட்டத்தைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு வேணடப்படுகின்றன.

## மட்டு.வந்தாறுமூலையில் உயர்தர மாணவர்கள் இருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்விற்காக பாடசாலையை அலங்கரித்துக் கொண்டிருந்த இரண்டு மாணவர்களும், பாடசாலைக் காவலாளியும் சிறிலங்காப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சித்தாண்டிப் பகுதியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிக் காயமடைந்ததை அடுத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே படையினர் இவர்களைக் கைது செய்ததாகக் கூறப்படுகின்றது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் ஏகாம்பரராஜா பிரபானந்தராஜா, விஸ்வநாதன் சிவலிங்கம், கனகரட்ணம் அசோக்குமார் எனவும் அங்கிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

## கதவடைப்பு...

குழுவிற்கும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக ஆரம்பமான இப்பேரணியானது அங்கிருந்து கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுச் செயலகத்திற்குச் சென்று மகஜரைக் கையளித்த பின் தொடர்ந்து கிளிநொச்சி அரச அதிபர் செயலகத்திற்குச் சென்று அரச அதிபரிடமும் மகஜர் கையளிக் கப்பட்டது.

நேற்றுக்காலை 9.30 மணிக்குப் புதுக்குடியிருப்பில் மாபெரும் கண்டனப்பேரணியும், மகஜர் கையளிப்பும் இடம்பெற்றன. இதனையிட்டு புதுக்குடியிருப்பில் தொழில்சார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டு பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியசாலையில் ஒன்று கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பொதுமக்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அங்கிருந்து அணிவகுத்து ஊர்வலமாகப் புதுக்குடியிருப்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை அமைந்துள்ள இடத்துக்குச் சென்றனர். கண்டனப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் அரசின் இந்த காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டித்தும் சர்வதேச சமூகம் மௌனத்தைக் கலைத்து நடவடிக்கையில் இறங்க வேண்டும் போன்ற கோசங்களை எழுப்பியும், சுலோக அட்டைகளைத் தாங்கியும் சென்றனர்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற இனவெறியாட்டம் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச்சங்க புதுக்குடியிருப்பிற்கான பொதுமக்கள் பாதுகாப்புப்பிரிவு வதிவிடப் பிரதிநிதி எவிலின் மேயர், புதுக்குடியிருப்புப் பணிமனைக்கான பதில் அலுவலகப் பொறுப்பாளர் மார்க்கிறே செஜீபர் ஆகியோருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதனையடுத்து முல்லைமாவட்ட கல்விச் சமூகத்தால் தயாரிக்கப்பட்ட மகஜரையும், தமிழ்மாணவர் ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட மகஜரையும் எவிலின்மேயர் அவர்களிடம் தமிழ் மாணவர்ஒன்றியத் தலைவர் நாகரூபன் அவர்களும்,வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் அவர்களும் கையளித்தனர்.

வவுனியாவில் நேற்று பூரண பணிப்புறக்கணிப்பும், கடையடைப்பும் நடைபெற்றது. இதன் காரணமாக அரச செயலகங்கள் இயங்காமலும், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும் போக்குவரத்துக்கள் செயலிழந்தும், பாடசாலைகள் வெறிச்சோடியும் காணப்பட்டன.


திருகோணமலை,மட்டக்களப்பு மாவட்டங்களும் பூரண ஹர்த்தால் அனுஷ் டிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.மாகாணசபை அலுவலகங்கள், நகரசபை மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்கள் இயங்கவில்லை. அரச தனியார் வங்கிகள் செயற்படவில்லை. பேருந்து சேவைகள் ஸ்தம்பித்தன. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பொலிஸ்,இராணுவத்தினர், கடற்படையினர் மேலதிகமாக நகரின் காவலில் ஈடுபட்டிருந்தனர். நகரில் காலையில் சில வெடிச்சத்தங்கள் கேட்டன. அவை டைனமற் திரிகளை வெடிக்க வைத்ததனால் ஏற்பட்டவை என்று பொலிசார் தெரிவித்தனர். மற்றப்படி அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர். (08,ச,தீ,25,21,33)

# ஐக்கியநாடுகள் விசேட தூதுவர் ம.உ செயலக இயக்குனருடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரத்திற்கும், மதநம்பிக்கைக்குமான விசேட தூதுவர் எ.மகரஜி வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இலங்கையின் மதமாற்றத்திற்கெதிரான மசோதாபற்றியும்,கிறிஸ்த்தவ ஆலயங்கள் தாக்கப்படுவதற்கான காரணங்களை ஆராயவும் தாம் வருகை தந்ததாகவும் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் கையாளப்படும் விதம் பற்றியும் பேசினார்.

இதனைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் பதிலளிக்கையில் நீண்டகாலமாக சிறிலங்கா இராணுவத்தினர்



நிலை கொண்டுள்ள பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்திவருவதாகவும் இச் சமாதான சூழலில் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை இழிவுபடுத்தும் வகையிலும் தாக்கும் வகையில் சூழலை உருவாக்கி வருகின்றனர். எனவும் குறிப்பிட்டார். அத்தோடு தற்போதும் கூட தேவாலயங்கள், கோவில்களில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதையும் அவர்களின் அனுமதிபெற்ற பின்பே வழிப்படக் கூடியதாகவுள்ளதையும் சுட்டிக்காட்டியதோடு பல தேவாலயங்களையும், கோவில்களையும் வழிபட மக்கள் இராணுவ தடைமுகாம்களைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இச் சந்திப்பில் ஐக்கியநாடுகள் சபையின் விசேட வதிவிடப் பிரதிநிதி றெரிமொன்கோபனும், ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி அன்ர[illegible] கிரடோவும் கலந்து கொண்டனர். (ச.கு)

# ஐ.ம.சு. கூட்டமைப்பை வீட்டுக்கு அனுப்பி மக்கள் அரசாங்கமொன்றை அமைப்போம்

### - சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து ரணில் உரை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சனாதிபதி பிரதமர், மற்றும் ஜே.வி.பி யினரை வீட்டுக்கு அனுப்பி, ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் அரசாங்கம் ஒன்றை அமைக்கவிருப்பதாகவும், அதன்மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி பொருளாதாரத்தையும் முன்னேற்ற விருப்பதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிக்கோத்தாவில் நேற்று இதுதொடர்பான விசேட நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இதன் போதேஅவர் இவ்வாறு கூறினார்.

இங்கு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், கட்சியின் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க, மக்களுக்கு சேவைசெய்யாத அரசாங்கத்தை வெளியேற்றுவதற்கு மக்களுக்கு உரிமை இருப்பதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதை தான் சவாலாக ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் அரசாங்கத்தை வெளியேற்றும் நடவடிக்கைகளை தாம் ஆரம்பித்திருப்பதாக இங்கு தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, ஆயுதங்களுடன் இருக்கும் எதிரியை ஆயுதங்களுடனும், அரசியல் எதிரியை பிரசாரத்தின் மூலமும் எதிர்க்கவேண்டும் என்றும், அதனால், கூட்டமைப்பு அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் பிரசாரத்தை தாம் ஆரம்பித்திருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார். (32)

## யாழ்...

மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ். குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது யாழ். தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரி நகர்ப்பகுதியில் திரண்ட மக்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தி சாவகச்சேரி நகரூடாகச்செல்லும் கண்டி வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்களைக் கலைந்து செல்ல வைப்பதற்காக சிறிலங்கா இராணுவத்தின் கலகமடக்கும் படைப்பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தடியடி, கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டதால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் படையினர் மீது கற்களை வீசியெறிந்து தாக்குதல் நடத்தினர். இப்பகுதியில் சுதர்சன் (வயது-21) என்பவர் படையினரால் பலவந்தமாக வானில் ஏற்றிச் செல்லப்பட்டார்.

இதேபோல் தென்மராட்சிப் பகுதியிலுள்ள கைதடிச்சந்தியிலும் பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டபோது மக்களைக் கலைந்து செல்ல வைப்பதற்காகப் படையினர் மேற்கொண்ட தாக்குதலால் அங்கு பெரும் வன் முறைகள் வெடித்தன. இதில் கைதடிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்று அடித்து நொருக்கி தீ மூட்டி எரிக்கப்பட்டதுடன் அங்குள்ள மற்று மொருஇராணுவ மினி முகாமின் ஒரு பகுதியும் பொதுமக்களால் நாசம் செய்யப்பட்டது.

இதுபோல தென்மராட்சியில் மீசாலைக்கு அருகிலுள்ள புத்தூர்ச் சந்தியிலும் இராணுவ காவலரண் ஒன்று பொதுமக்களால் தீக்கிரையாக்கப் பட்டது. இதேபோல் வடமராட்சி ,நெல்லியடி,சாரையடி, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் பொதுமக்கள் மேற்கொண்ட போராட்டங்களைத் தடுத்து நிறுத்த முற்பட்ட படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே பெரும் முறுகல்களும், கைகலப்பும் இடம்பெற்றிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (27,33,கா)

## பொருளாதார...

மக்கள் கட்டைபறிச்சானில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது வடக்குக் கிழக்கு ஆளுனர் ரிரோன் பெர்னாண்டோ தடை நீக்கப்படுமென வாக்களித்திருந்தார். ஆனால் தடை தற்போதும் தொடர்கின்றது. (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது